விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 05 வெள்ளிக்கிழமை (20.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கு சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்ற பணிப் புறக்கணிப்பு!

## மன்னார் தாக்குதலைக் கண்டித்து

யாழில் இடம்பெற்ற சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பின் போது...



*(யாழ்ப்பாணம்)*, நீதிமன்ற நடவடிக்கையில் அரசியல் தலையீடு, அச்சுறுத்தலைக் கண்டித்து வடக்கில் சட்டத்தரணிகள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்ததனால், பல நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் பாதிக்கப்பட்டிருந்தன. வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை, மன்னார், வவுனியா ஆகிய நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் ஆர்ப்பாட்டப் பேரணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## புலிக் கொடி விவகாரம் விசாரணை நடத்தப்படும்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நெல்லியடியில் நடைபெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது புலிக் கொடி ஏந்தியவாறு மோட்டார் சைக்கிள்களில் வலம் வந்த மர்ம நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டின்போதே அவர் இதனைக் கூறினார்.

நெல்லியடி ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற புலிக் கொடி விவகாரம் தொடர்பில்செய்தியாளர்ஒருவர்கேள்வி எழுப்பியபோதே ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் அந்த செய்தியாளர், ஐக்கிய தேசியக் கட்சியினரால் யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடத் தப்பட்ட மே தினப் பேரணியின்போதும் புலிக் கொடி ஏந்தியவாறு மர்ம நபர்கள் நடமாடியதை ஞாபகப்படுத்தினார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## பரு.நீதிமன்ற நீதவானின் வீட்டின் மீது தாக்குதல்

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தின் வீட்டின்மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நெல்லியடி முருகன் கோவிலுக்கு அருகில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் சென்று இனந்தெரியாதோர் இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தென்னங்குரும்பையைக்கொண்டு மேற்கொள் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ். மருத்துவர் சங்க தலைவர் வைத்தியர் நிமலனுக்கு மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் எஸ்.நிமலனுக்கு தொலைபேசியூடாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இம் மிரட்டலை விடுத்தவர் தன்னை சி.ஐ.டி. என இனங்காட்டியுள்ளதாகவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

கைத்தொலைபேசிமூலம்நேற்றுக் காலை 10.45 மணியளவில் தொடர்பு கொண்ட பிரஸ்தாப நபர் தன்னை 10 நிமிடங்கள் வரை அச்சுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இம் மிரட்டலின்போது வைத்தியர் நிமலனுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புண்டு என்றும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் வைத்தியர் நிமலனின் கைத்தொலைபேசியில் பலமுறை தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் இதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாகவும் அவ் அநாமதேய அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட குறித்த நபர் சிங்களத்தில் உரையாடியதோடு இனியும் வைத்தியசாலை நிர்வாகத்தில் தலையிட்டால் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## கடற்புலிகளின் தந்திரோபாயங்களால் உலக கடற்படைகளுக்கு நெருக்கடி

### படைத் தரப்பு தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கடற்படைப் பிரிவான கடற்புலிகளால் தற்போது அச்சுறுத்தல் இல்லாதபோதும் அவர்களின் தந்திரோபாயங்களால் உலகிலுள்ள கடற்படைகளுக்கு தொடர்ந்தும் நெருக்கடிகள் உள்ளதாக இலங்கைப் படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

கடற்புலிகள் தமது அனுபவங்களையோ அல்லது நிபுணத்துவத்தையோ வெளிநாட்டு தீவிரவாத சக்திகளுடன் பகிர்ந்து கொண்டதற்கான எந்த உறுதியான ஆதாரங்களும் இல்லாத போதிலும் அவர்களின் தந்திரங்களைப் பயன்படுத்தி தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் இலங்கையின் மூத்த படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் படகு ஒன்றின் மீது டுபாய் கடற்பரப்பில் வைத்து அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்று நடத்திய தாக்குதல்குறித்து கருத்து வெளியிட்டுள்ளபோதே அந்த அதிகாரி இவ்வாறு கூறியுள்ளார்.

2000-ம் ஆண்டு ஒக்ரோபர் 12-ம் திகதி ஏடன் துறைமுகத்தில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## 13 கட்சிகள், 21 சுயேட்சைக் குழுக்கள் மட்டக்களப்பில் வேட்புமனுத் தாக்கல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு மாவட்ட வேட்புமனுக்கள் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்று நண்பகல் 12 மணிவரையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 13 அரசியல் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளாலும் 21 சுயேட்சைக் குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்ட 34 வேட்பு மனுப் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

இதில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உட்பட 13 அரசியல் கட்சிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பு *(19ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைக்கு பயிற்சியளிப்பதில் இந்தியாவே பிரதான பங்காளி

### அமைச்சர் ஹெகலிய விளக்கம்

படையினருக்கு பயிற்சி அளிப்பதில் இலங்கையின் பிரதான பங்காளியாக இந்தியாவே காணப்படுகின்றது என்று ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

ஆயிரம், ஆயிரத்து 500 பேருக்கு பயிற்சியளிக்கும் இந்தியாவுக்கு 8 பேர் என்ற விடயம் பாரிய பிரச்சினையாகத் தோன்றாது. இதனையொரு பிரச்சினையாக கருதாத பட்சத்திலேயே இலங்கை விமானப் படையினர் 8 பேருக்கும் வேறு இடத்தில் பயிற்சி அளிக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இது தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலைமையாகும்.

இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டைச் சேர்ந்த குறிப்பிட்ட சில குழுவினரே குரல் எழுப்பி பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு ஆதரவு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தேர்தலில் குற்றவாளிகள் போட்டியிட தடை விதிப்பு!

### ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், தேர்தலில் போட்டியிடுவதற்கான தற்காலிக தடையினை விதிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என ஊடகத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஹெகலிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்கள் எவரும் இதுவரை குற்றவாளிகள் என நிரூபிக்கப்படவில்லை. அதனால் அவர்கள் குற்றவாளிகள் என கூறிவிட முடியாது.

அதேவேளை இவ்வாறு குற்றச்சாட்டுகளுக்கு *(19ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தின் 26ஆவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக இலங்கை நுகேகொட திறந்த பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.அன்பகன் அரியதுரை, கொழும்பு தனியார் வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி யூலிட் எஸ்.அரியதுரை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-9)

# மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிர தேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், மீசாலை, அல்லாரை, மந்துவில், வரணி, உசன், மிருசுவில், பளை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டா தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சி புரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர், யாழ் பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், சாமியன் அரசடி, கலிகை, தாமரைக்குளத்தடி, யாக்கரு, கிழவிதோட்டம், துன்னாலை அடங்கலான கரவெட்டிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

மறுநாள் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் க்ந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடப் பிரதேசம், யாழ்.நகரம் முழுவதும், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர், உடுப்பிட்டி தொடக்கம் தொண்டைமனாறு வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

# தோட்டினை அபகரித்த பெண் கைதானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் வயோதிபப் பெண்மணியொருவரினை ஏமாற்றி அவரது தோட்டினை அபகரித்துச் சென்ற பெண்ணை வைத்தியசாலையின் பாதுகாவலர்கள் தந்திரமாக பிடித்து யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த 14-ம் திகதி இடம்பெற்ற போதிலும் குறித்த திருட்டோடு சம்பந்தப்பட்ட பெண் நேற்றையதினமே கைது செய்யப்பட்டுள்ளார்.

கச்சேரி வீதி கொடிகாமத்தினைச் சேர்ந்த செல்லையா சரஸ்வதி (வயது-66) என்றபெண் மணி யாழ்.போதனாவைத்தியசாலையில் 23 ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

இதன்போது குறித்த வயோதிபப் பெண்ணிடம் தந்திரமாக தோட்டினை கழற்றித் தருமாறு கூறி பிரஸ்தாபப் பெண் அபகரித்துச் சென்றுள்ளார்.

இதில் ஏமாந்த பெண்மணி யாழ்.பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

குறித்த தோட்டினை அபகரித்த பெண் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தபோது குறித்த பெண்ணை அடையாளம் கண்டுகொண்ட வைத்திய சாலைப்பெண் பராமரிப்பாளர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸார் குறித்த பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (எ-4)


af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Française de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna Phone : 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம்.
(066)


# சட்டத்தரணிகளின் பணிப் பகிஷ்கரிப்பு மக்களின் நலனை பாதிக்கக் கூடாது

## யாழ்.நீதிபதி கணேசராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் நீதிமன்ற உத்தரவுக்குப் பின் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் நடைபெறும் சட்டத்தரணிகளின் பணிப் பகிஷ்கரிப்பு பொது மக்களின் நலன்களையோ, அன்றாட நீதிமன்ற நடவடிக்கைகளையோ பாதிக்கும் வகையில் அமையக்கூடாது.

மன்னாரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் சட்டமுறையான நடவடிக்கை மூலமும், நீதிச்சேவை ஆணைக் குழுவுக்கு முறைப்படியாக அறிவித்தல் கொடுத்து நடவடிக்கை எடுப்பது தான் உசிதமாக இருக்க முடியும் எனக் கருதுவதாக யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்தார்.

ஏற்கெனவே விசாரணைகள், கட்டளைகள், தீர்ப்புக்கள் தாமதிப்பது குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இதனால் பொது மக்கள் அதிகளவில் பாதிக்கப் படுவதாகவும்,

நீதி தாமதிக்கப் படுவது நீதி மறுக்கப் படுவதற்கு சமன் என தான் க்ருதுவதாகவும், நீதிபதி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சட்டத்தரணிகளின்பகிஷ்கரிப்பில் தாம் எவ்வித தலையீடும் செய்யவில்லை எனவும் நீதிபதி என்ற முறையில் தமது கடமைகளை பொது மக்களிற்கு பங்கம் ஏற்படாத வகையில் தாம் தொடர்ந்து செய்யப்போவதாகவும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தான் நீதிச்சேவை ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)


- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
July 2012 to December 2012
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
(சி-574)
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2012



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 01 1959



மறைவு 20 06 2012

அமரர் மதியாபரணம் சரத் பஞ்சாட்சரம்
(ராசி சில்க்ஸ்)

கடந்த 20.06.2012 புதன்கிழமை எமது குடும்பத் தலைவரின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களும் மற்றும் இறுதிநிகழ்வில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துத் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மதியாபரணம் குடும்பத்தினர்

வடலியடைப்பு
தற்போதைய முகவரி :
கந்தசாமி கோவிலடி, கோப்பாய் வடக்கு.
0722211922
(C-572)



பதவி வெற்றிடம்

யாழ் நகரில் உள்ள பிரபலமான நிறுவனமொன்றுக்கு கணக்காளர் (Accountant) தேவை. தகைமையுடைய இருபாலாரும் தங்கள் விண்ணப்பத்தை

விளம்பர இல. C-574
வலம்புரி,
இல. 3, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தவறாது குறிப்பிடுவதுடன் விண்ணப்பத்தில் தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.
(C-574)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எனக்குத் தெரியவில்லை

ஒரு காட்டிலே முனிவர் ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அவரைத் தேடி நான்கு பேர் வந்தார்கள்.

''சுவாமி, எங்களுக்கு நீண்ட நாளாக ஒரு சந்தேகம்'' என்று சொன்னார்கள்.

"என்ன?" என்று முனிவர் விசாரித்தார்.

"இவ்வுலகில் எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகிறன... எது நியாயம்... எது அநியாயம் என்று புரிந்துகொள்ள முடியவில்லை'' என்றார்கள்.

''அதை யாராலும் புரிந்துகொள்ள முடியாது'' என்று முனிவர் கூறினார்.

வந்தவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

முனிவர் இவர்களுடைய சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக "சரி... புறப்படுங்கள் என்னோடு" என்று அழைத்தார்.

''இப்போது உங்களை ஒரு புஷ்பக விமானத்திலே அழைத்துக் கொண்டு போகப் போகிறேன். இந்த உலகில் சர்வ சாதாணரமாக, நடந்து கொண்டிருக்கும் ஒரு காட்சியைக் காண்பிக்கப் போகிறேன். நீங்கள் அதைப் பார்த்துவிட்டு அந்தக் காட்சி நியாயமா... அநியாயமா என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் சரியான பதில் கூறினால், புஷ்பக விமானத்திலே தொடர்ந்து பயணிக்கலாம் எனக் கூறினார்.

தவறான பதில் சொன்னால், இந்த புஷ்பக விமானம் உங்களைக் கீழே தள்ளி விடும்" என்றார்.

நான்கு பேருக்கும் பயம் ஆட்கொண்டது. இருந்தாலும் முனிவர் அழைக்கிறாரேயென்று புறப்பட்டார்கள்.

அவர்கள் எல்லோரும் புஷ்பக விமானத்திலே ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் அங்கே நடக்கும் ஒரு காட்சியை முனிவர் காட்டினார்.

அப்போது விமானத்தில் இருந்தவாறு எல்லோரும் கீழே குனிந்து பார்த்தார்கள்.

அங்கே... ஒரு தாய்ப்புலி அப்போதுதான் குட்டிகளை ஈன்று கொண்டிருந்தது. குட்டிகளை ஈன்ற உடனேயே பசிக்கு இரை தேடிச் சென்றது.

அதேநேரம்... ஒரு தாய் மான். அதுவும் அப்போதுதான் குட்டி ஈன்று கொண்டிருந்தது. குட்டிகளை ஈன்று விட்டு பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமாக வருகிறது.

புலி அந்த மானை அடித்துக்கொன்று விட்டு தானும் சாப்பிட்டுவிட்டு... குட்டிகளுக்கும் கொடுத்தது.

இப்போது அந்தப் புலிக்குட்டிகள் முகத்திலே மகிழ்ச்சி. தாயை இழந்த அந்த மான்குட்டிகள் முகத்திலே துக்கம் குடி கொண்டுள்ளது.

இப்போது அந்த முனிவர் அந்த நான்கு பேரிடமும் கேட்கிறார்;

''நீங்கள் இங்கே பார்த்தீர்களே... இதிலே எது நியாயம்... எது அநியாயம்... ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். உங்கள் பதில் தவறு என்றால், இந்த விமானம் உங்களைக் கீழே தள்ளிவிடும்'' என்று கூறினார்.

முதலில் ஒருவர் கூற ஆரம்பித்தார்.

"அந்தப்புலி செய்தது சரிதான். அதன் பசிக்கு அதுதான் ஆகாரம். தனது பசியை நீங்குவதற்கு இரை தேடிக்கொண்டது அவ்வளவு தான்... இப்படிச் சொல்ல விமானம் அவரை கீழே தள்ளி விட்டது. அதனால் அந்தப் பதில் பிழையானது என புரிந்து விட்டது.

இரண்டாவது நபர் சொன்னார்; புலி செய்தது பாவம்... அந்தத் தாய் மான் என்ன பிழை செய்தது... குட்டிகளுக்கு யார் ஆதரவு? அதனால் புலி செய்தது அநியாயம்?" என்றார். அவ்வளவுதான் அவரையும் கீழே தள்ளிவிட்டது விமானம். இந்தப் பதில் சரியில்லை என்று புரிந்து விட்டது.

மூன்றாவது ஆள் வந்தார்.

முதலில் இருவர் கீழே விழுந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதனாலே அவர் சொன்னார்;

"இரண்டுமே நியாயம் தான்... புலி இரை தேடியதும் இயற்கை. அதற்கு மான் இரையானதும் இயற்கை. அதனாலே இதிலே எதுவுமே பிழையில்லை—என்றார். அவ்வளவுதான். அவனையும் விமானம் கீழே தள்ளி விட்டது.

இப்போது நான்காவது நபர் வந்தார்.

முனிவர் கேட்டார்; ''நீயாவது சொல்... இந்த செயலில் எது நியாயம்?" என்றார்.

அவன் தெளிவாகக் கூற ஆரம்பித்தான்; ''எனக்குத் தெரியவில்லை'' என்றான். அவனை விமானம் கீழே தள்ளவில்லை. சௌகரியமாக பிரயாணம் செய்தான்.

இதுதான் சரியான பதில் என்பதை முனிவர் உணர்த்தினார்.

இதில் இருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த உலகில் எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகிறது. அவை ஏன் நடக்கிறது என்பதை எந்தப் பண்டிதராலும் பதில் சொல்ல முடியாது. தெரியாததை தெரியாது என்று ஒத்துக் கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் சுகமாக இருக்கும்.

அதனால் தேவையில்லாத விடயங்களைப் புரிந்து கொள்வதற்காக நேரத்தை செலவு செய்யாதீர்கள்.

வாழ்க்கையை குழப்பாதீர்கள். தேவையானவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள் அதுபோதும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆய்வு மகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதன்முறையாக சர்வதேச ஆய்வு மகாநாடு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

அனைத்துப்பீடங்களையும் உள்ளடக்கிய வகையில் பல்வேறு குழுக்களைக் கொண்டதாக இம்மகாநாட்டுச் செயற்பாடுகள் கட்டமைக்கப் பட்டுள்ளன. இதன் பிரதான இணைப்பாளராக பேராசிரியர் ஸ்ரீசற்குணராசா செயற்படுகிறார்.

தொடர்ந்து இருநாட்கள் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டுக்குப் பிரதம விருந்தினர்களாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, பிரதான உரைவழங்குநராக (Key Note Address) களனிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இம் மகாநாட்டில் ஏறத்தாழ 300 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன. இது ஆய்வியல் சிந்தனைகளையும் அறிவியல் கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமையும். இதில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மற்றும் நிறுவனம் சார் ஆய்வாளர்களும் பிறநாட்டு ஆய்வாளர்கள் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இங்கு நடைபெறவிருக்கும் பல்வேறு துறை சார்ந்த ஆய்வு அமர்வுகளில் சிறப்புரையாற்றவுள்ளனர். அதனைத் தொடர்ந்து அந்தந்த அமர்வுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் உரியவர்களால் சமர்ப்பிக்கப்படும். சமர்ப்பிக்கப் பட்ட 420 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் ஏறத்தாழ 300 கட்டுரைகள் இவ் இரு நாட்கள் மகாநாட்டில் வாசிக்கப்பட இருக்கின்றன.

இதுவரை 650 இற்கும் மேற்பட்டவர்கள் இவ் ஆய்வு மகாநாட்டில் பங்குபற்றுவதற்கான தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது இம் மகாநாட்டின் கனதியையும் சிறப்புத் தன்மையினையும் காட்டுகின்றது. இம் மகாநாட்டின் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அறிவியல் ஆய்வு ரீதியாக நிலை நிறுத்துவதற்கும் சர்வதேச ரீதியில் நிலைப்படுத்துவதற்கும் முடியும் என்பது திண்ணம்.

அனைத்துப்பீட விரிவுரையாளர்களும் மாணவர்களும் போதனைசாரா ஊழியர்களும் ஒன்று சேர்ந்து ஒழுங்குபடுத்தி நடத்தப்படும் இம் மகாநாட்டின் மூலம் பல்வேறு நன்மைகளை அடைய முடியும். (அ-2)

# வரலக்ஷ்மி விரத விழா

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரத விழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு மஹாலக்சுமிக்கு விசேட அபிஷேகம், விசேட பூஜை என்பன நடைபெற்று வரலக்சுமி காப்பு வழங்கலும் நடைபெறும். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 30 | 100 | 80 |
| தக்காளி | 140 | 140 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | -- | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 110 | 140 | 140 |
| பூசணி | 50-60 | 50 | 60 | 60 |
| புடோல் | 30 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 50 | 90 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | 130 | -- |
| பயற்றங்காய் | 150 | 110 | 120 | 80 |
| லீக்ஸ் | -- | 120 | 130 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 80 | 90 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 25-30 | 40 | 100 | 80 |
| போஞ்சி | -- | 110 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 50 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

# இராசி பலன்

20.07.2012

(ஆடி 05, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

பிரதமை முற்பகல் 10.32 மணிவரை

பூசம் பிற்பகல் 12.36 மணிவரை

இராகுகாலம் 10.31-12.01 மணிவரை

சுபநேரம் 6.01-7.31 மணிவரை

**மேடம்** புதிய விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழி அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பொன்னான நாள்,பொருள் வரவில் அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் நன்மையுண்டு.

**கடகம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**சிங்கம்** தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள்.

**கன்னி** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன நன்மையுண்டு.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத பண வரவுகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், அதிகாரத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்,உயரதிகாரிகள் மனங்கோணாது நடந்து கொள்ள வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, திட்டமிட்ட காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து பேசுவார்கள், தொழில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் நான்கு புதிய கட்டடங்களுக்கான திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதற்கமைய யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மற்றும் யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய கட்டடங்களை திறந்து வைத்த காட்சிகள் சில... (படங்கள்– செல்வதீபன்)

# வடமாகாண கல்வி மேம்பாடு குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வட மாகாண கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நூலக கேட்போர் கூடத்திலும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை மத்திய மகா வித்தியாலயத்திலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.

எனவே வடமாகாண கல்வி வளர்ச்சி தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குவதற்கு கல்வி ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது பங்கேற்குமாறு வட மாகாண கல்வி அபிவிருத்திக்குழுத் தலைவர் இரா. செல்வவடிவேல் அழைப்பு விடுத்துள்ளார். (அ-2)

# கைதடி பனை ஆராய்ச்சி நிலைய அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சிறப்பு விருந்தினர்களாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


மேலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பனை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டட புனரமைப்பு வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது. இதன் கீழ் கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டன.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு கூட உபகரணங்களுக்கென இந்திய அரசாங்கம் 70 மில்லியன் ரூபா நிதியினை சிறு அபிவிருத்தி நன்கொடை திட்டத்தின் கீழ் வழங்கியிருந்தது. இதில் ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப்பொருட்கள், தளபாடங்கள், வாகனங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)




# த.தே.ம.முன்னணி ஆதரவாளர் வீட்டின் மீது கழிவு ஒயில் வீச்சு



(கரவெட்டி)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர் ஒருவரின் வீடு கழிவு ஒயில்களாலும் போத்தல்களாலும் வீசி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

நெல்லியடி வடக்கு வதிரி பகுதியைச் சேர்ந்த ந. புஸ்பவசந்தன் என்ற ஆதரவாளர் வீட்டின் மீதே நேற்று அதிகாலை இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் நேற்று முன்தினம் நெல்லியடியில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்திற்கு முன்நின்று இவர் செயற்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக கட்சியின் தலை மைப் பீடத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செல்வ ராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலி ஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)

# உயர்தர மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம் என்பன நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தினங்களில் இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்து.

இக்கருத்தரங்கில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசறிவியல், முற்பகல் 11.30 மணிக்கு சித்திரம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இந்து நாகரிகம், முற்பகல் 10 மணிக்கு அரசறிவியல், முற்பகல் 11.30 மணிக்கு சித்திரம் ஆகியு பாடங்களுக்கு கருத்தரங்கு நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியல் பாட கருத்தரங்கும் நடைபெறும். இக்கருத்தரங்குகள் யாழின் பிரபல ஆசிரியர் குழாமினாலேயே நடத்தப்படவுள்ளது.

எனவே இக்கருத்தரங்கில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு இணுவில் பொது நூலகர் சங்கம் அறிவித்துள்ளது. (அ-2-9)

# அல்காவின் ஆனந்த ராகங்கள் மாபெரும் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த விஜய் ரீவி ஜுனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி அல்கா அஜித்துடன் மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் அல்காவின் ஆனந்தராகங்கள் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இவ் இசை நிகழ்வு அன்ரா டிஜிற்றல் இமேஜ் இன் ஆதரவில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலையரங்கிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான நுழைவுச்சீட்டுக்கள் 200 ரூபா, 300 ரூபா, 500 ரூபா மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கானவை யாகும். (அ-9)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, சுதுமலை ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பஷார்-II பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஸ்ரான்லி வீதி பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திற்கு முன்புறமாகவும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை அத்தியடி பிள்ளையார் கோவிலடியிலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

# தேசிய ரீதியில் மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த சண்முகம் சாமுஎல் உலக ஒத்தியல்பு தினத்தை முன்னிட்டு இலங்கை ஒத்தியல்பு சபையினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே மருத்துவ அறிக்கையின் உண்மைத் தன்மையும் ஒத்தியல்பும் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் 19 வயதிற்குபட்ட பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார் என கல்லூரி அதிபர் எஸ். கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் தமிழ் கடற்படை அதிகாரிக்கு தஞ்சக் கோரிக்கை நிராகரிப்பு

## இலங்கை அதிகாரிகள் கடும் அதிர்ச்சி

(கொழும்பு)

**போர்க்குற்றம் புரிந்த கடற்படையில் பணியாற்றியவர் என்பதால் கடற்படையின் முன்னாள் அதிகாரிக்கு கனேடிய நீதிமன்றம் அரசியல் தஞ்சம் அளிக்க மறுத்துள்ள விவகாரம் இலங்கை அதிகாரிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

கடற்படையில் பணியாற்றிய கடற்படை அதிகாரி இறுதிக்கட்டப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடாதபோதும் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட கடற்படையில் பணியாற்றியவர் என்ற வகையில் அவருக்கு அரசியல் தஞ்சம் அளிக்க கனேடிய சமஷ்டி நீதிமன்றம் மறுத்துவிட்டது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி இதுபற்றிய தீர்ப்பை கனேடிய சமஸ்டி நீதிமன்றம் வெளியிட்டது. இவர் இறுதிக் காலகட்டத்திலோ அல்லது அதற்கு முன்னரோ போர் நடவடிக்கைப் பிரதேசத்தில் பணியாற்றியிருக்கவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துப் படகான எஸ்எல்என்எஸ் ஜெயசாகரவில் 1980 களில் இவர் ஒரு பதில் சப் லெட்டினன்டாக பணியாற்றியிருந்தார். அவருடன் விடுதலைப்புலிகள் இணக்கப்பாட்டுக்கு வருவதைத் தடுப்பதற்காக அவர் கொழும்புக்கு மாற்றப்பட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதற்கிடையே போர்க்குற்றங்களில் ஈடுபட்ட கடற்படையில் பணியாற்றியதைக் காரணம் காட்டி அவரது அரசியல் தஞ்சக் கோரிக்கையை கனடா நிராகரித்துள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாத முடிவு என்று இலங்கை அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கொடியின் கீழ் போரிட்ட நூற்றுக்கணக்கான முன்னாள் புலிகள் தற்போதும் கனடாவில் வசிக்கின்றனர் என்றும் 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னரும் அவர்களில் பலர் அங்கு சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் இந்த முடிவுக்கு இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படங்களும் ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையுமே காரணம் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட சில வாரங்களில் 2009 ஜூனில் கடற்படையில் இருந்து ஓய்வுபெற்ற கொமடோர் குருபரன் 2009 ஓகஸ்ட் 4 ஆம் திகதி கனேடிய எல்லையை அடைந்திருந்தார்.

இவர் கனடாவில் அரசியல் தஞ்சம் கோரியது பற்றி இலங்கை கடற்படை அறிந்திருக்கவில்லை.

அவரது தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து சமஷ்டி நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பு அனைத்துலக ஊடகங்களில் வெளியான பின்னரே இதுபற்றி கடற்படை அறிந்துள்ளது.

கனடாவின் இந்த முடிவு இலங்கை அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலய நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு சிரேஷ்ட ஆசிரியர் ச.சிவசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசா, சிறப்பு விருந்தினர்களாக எஸ்.கணேசவேல், திருமதி ஜெயானந்தி சிறிக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது ஆசியுரையினை சிவஸ்ரீ க.குகதாசக்குருக்கள், வாழ்த்துரையினை இலங்கை சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சார்யார் சுவாமிஜி ஜாக்கிரத சைதன்யா ஆகியோர் வழங்கவுள்ளனர். மேலும் உத்துங்க விநாயகர் பரிபாலன சபைத் தலைவர் ஆர்.ரி.அருணகிரியின் கௌரவிப்பு நிகழ்வும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (அ-9)

# கிழக்கு தேர்தலில் மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்

## பிள்ளையானின் நம்பிக்கை

(மட்டக்களப்பு)

மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு சிறந்த பாடம் கற்பிப்பார்கள் என கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் சர்வாதிகார அரசியலை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகிய மூவரும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விரைவில் உடையும். அவர்கள் ஐக்கியமாக இல்லை. நாங்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று இனங்களையும் ஒன்றிணைத்து தேர்தலில் களமிறங்குவோம்.

இம்முறை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி 25 முதல் 27 ஆசனங்களை கைப்பற்றும் என முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# ஈழக்கோரிக்கையை கைவிடவில்லையாம்

## கருணாநிதி கூறுகிறார்

தமிழீழக் கோரிக்கையை கைவிடவில்லை என முன்னாள் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் ஈழம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப் படாவிட்டாலும் ஈழக் கோரிக்கை கைவிடப் படவில்லை.

சில ஊடகங்கள் தமது கருத்தைத் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

டெசோ மாநாட்டில் எஞ்சியுள்ள தமிழர்களின் புனர்வாழ்வு மற்றும் நலன்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

எஞ்சியுள்ள ஈழத் தமிழர்களின் நலனை உறுதிப்படுத்துவதே முதன்மைக்கடமையாகும் எனவும் இதன்மூலம் ஈழக்கோரிக்கை கைவிடப்பட்டதாக அர்த்தப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் உதவியை நாடி நிற்கும் தருணத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே பொருத்தமானது எனவும் மாறாக அவர்களை மேலும் நெருக்கடியில் ஆழ்த்துவது பொருத்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**முழுமை நல வாழ்விற்கு வேதாத்திரி மகரிஷியின் மனவளக் கலை யோகப் பயிற்சி**

மேற்படி யோகாப் பயிற்சி பற்றிய இலவச அறிமுக விளக்கவுரையில் உங்கள் உடல் நலக் குறைவு சம்பந்தமான விளக்கத்தை 21.07.2012 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் இராசேந்திரம் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம். இதனைத் தொடர்ந்து அகத்தாய்வு ஒன்றுக்கான பயிற்சியும் நடைபெறும்.

இடம்:- 14/4, கோவில் வீதி, 1 ஆம் ஒழுங்கை,
சாந்தஜோன் தேவாலயம் அருகாமை, யாழ்ப்பாணம். (இ)

மேலதிக தொடர்புகளுக்கு:-0774528839, 0714711128, 021 3202286



**மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை**

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சதயம் 1
உயரம்:- 5'7"
கி.பா:-28.25 , 1 இல் செவ், சனி
தொழில்:- MSC(U.K)Bio M.DSC மருத்துவ விஞ்ஞானி B/151

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-திருவோணம் 1
உயரம்:-5'8"
கி.பா:-44
தொழில்:-காப்புறுதி முகவர் B/140

பிறப்பு:- 1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூரட்டாதி 3
உயரம்:- 5'5"
கி.பா:-63.5, 7 இல் செவ்,சூரி
தொழில்:-படப்பிடிப்பாளர் B/157

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி
உயரம்:- 5'6"
கி.பா:-38.25
தொழில்:-நிர்வாக உத்தியோகத்தர் B/143

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சித்திரை 3
உயரம்:- 5'5"
கி.பா:-23.75, 8 இல் செவ்
தொழில்: பட்டதாரி ஆசிரியை (சைவ போசனம்) G/100

பிறப்பு:- 1981 இந்து வேளாளர்
நட்சத்திரம்: சுவாதி 1
உயரம்:-5'5"
கி.பா:- 18, 4 இல் செவ்
தொழில்:-Bcom. பட்டதாரி G/135

பிறப்பு:- 1988 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சுவாதி 2
உயரம்: 5'
கி.பா:-42, 2 இல் செவ்
தொழில்: ஆசிரியை G/136

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சதயம் 1
உயரம்: 5'2'
கி.பா:-10.75 , 2 இல் செவ் G/129

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கந்துவட்டி என்ற பெயரில் பணமும் நகையும் அபகரிப்பு

## இலங்கையர் கைதானார்

திருச்சியில் வசித்து வரும் இலங்கை பெண் 16.5 இலட்சம் ரூபா கடன் வாங்கியதற்கு கந்துவட்டி என்ற பேரில் 59.4 இலட்சம் ரூபா பணத்தையும் காணியையும் மிரட்டி வாங்கிக் கொண்ட குற்றச்சாட்டில் அங்கு நிதி நிறுவனமொன்றை நடத்தி வந்த இலங்கை நபர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இலங்கையை சேர்ந்த இவர் பல ஆண்டுகளுக்கு முன் திருச்சி வந்து சுந்தர் நகரில் வசித்து வருகிறார். குறித்த பெண்ணின் தம்பி லண்டன் செல்ல பணம் தேவைப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் அதே பகுதியில் வசித்த இலங்கையரும் நிதி நிறுவனத்தை நடத்தி வருபவருமான நபரை அணுகி பணம் கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அந்நபர் உரிய ஆவணங்களை பெற்றுக் கொண்டு குறித்த பெண்மணிக்கு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை கொடுத்துள்ளார்.

இந்நிலையில் தான் பெற்றுக் கொண்ட கடன் தொகைக்காக சில மாதங்களுக்கு முன் வரை 59 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை குறித்த பெண் நிதி நிறுவன உரிமையாளருக்கு கொடுத்துள்ளார்.

வெறும் 16.5 இலட்சம் ரூபா கொடுத்து கந்து வட்டி என்ற முறையில் 59.4 இலட்சம் ரூபாவை வசூலித்த பின்னரும் அசல் தொகையை கொடுக்க வேண்டும் எனவும் நிதிநிறுவன உரிமையாளர் மிரட்டியுள்ளார். இதற்கு பயந்த குறித்த பெண் தன் பெயரில் இலங்கையிலிருந்த காணியையும் சாந்த குமாரின் பெயருக்கு எழுதிக் கொடுத்தார். பின்னர் அவர் இது தொடர்பாக பொலிஸ் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சாந்தகுமாரை கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைந்தனர். (அ-2)

# இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-வெல்லாவெளியில் மாடு மேய்க்கச் சென்ற இளைஞன் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் படுகாயமடைந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் தங்கவடிவேல் அருள்பிரகாசம் (20 வயது) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது மாட்டின் பின்னால் மறைந்திருந்த நபர்கள் தன்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக காயமடைந்தவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இளைஞர் கையில் பலத்த காயத்துடன் மட்டக்களப்பு போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணனிகளை வழங்க ஊடக அமைச்சு நடவடிக்கை

ஊடகவியலாளர்கள் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக சலுகை வட்டி அடிப்படையில் வங்கிக் கடன்களை பெற்றுக் கொடுக்கும் திட்டமொன்று கடந்த காலங்களில் ஊடகத்துறை அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்தது.

கடன்தொகைகளை பெற்றுக்கொள்ளாமையால் அந்தக் கடன் வழங்கும் திட்டத்தில் பாரியளவில் நிதி மிகுதியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளராகவிருந்த டபிள்யூ.பீ. கணேகல அந்த நிதியின் மூலம் மடிக்கணனிகளை கொள்வனவு செய்து அவற்றை இலவசமாக ஊடகவியலாளர்களுக்கு விநியோகிக்க தீர்மானித்திருந்தார்.

இவை பல மாதங்களுக்கு முன் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றை பெறத் தகுதியுடையவர்கள் ஊடகவியலாளர்கள் மட்டுமே. ஆகவே ஒரு நிகழ்ச்சியொன்றை நடத்தி ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மூலம் அவற்றை வழங்கத்திட்டமிட்டிருந்தோம். இந்த கணனிகளை பெறத் தகுதியுடைய ஊடகவியலாளர்களின் பெயர்களை வழங்குமாறு ஊடக நிறுவனங்களில் பிரதானிகளுக்கு அறிவிக்க தயாராக இருந்தனர்.

ஆனால், அவர் சுகவீனமடைந்ததன் காரணமாக அவற்றை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் யோசனைத் திட்டத்தின் கீழே ஊடகவியலாளர்களுக்கு இவற்றை விநியோகிக்கத் தீர்மானித்தோம். இவற்றை கேள்வி மனுக்கோரல்கள் மூலமே நாம் இந்த மடிக்கணனிகளை கொள்வனவு செய்திருந்தோம் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




### மாணிக்கம் சின்னத்துரை

கடந்த 20.06.2012 புதன்கிழமை அன்று எமது குடும்பக் குல விளக்கு இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசி மூலம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தமைக்கும் நன்றியைக் கூறுவதுடன் இன்று 20.07.2012 வெள்ளிக்கிழமை மு.ப 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றிக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வெற்றிக்காடு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்





புனரமைக்கப்பட்ட

## யாழ். பழைய பூங்கா திறப்பு விழா

20 ஜூலை 2012, மதியம் 12.00 மணி







மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களுடைய
மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தின் கீழ் "வடக்கின் வசந்தம்"
நிகழ்ச்சித் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வட மாகாண
ஜனாதிபதி செயலக அணித் தலைவருமான கௌரவ பசில் ராஜபக்ச
அவர்களின் வழிகாட்டலிலும் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்
மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசனையுடனும்
வட மாகாண ஆளுநர் கௌரவ ஜீஏ சந்திரசிறி அவர்களின் செயற்பாட்டிலும்
யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்ட பழைய பூங்காவானது மக்களின்
பயன்பாட்டிற்காக 20 ஆம் திகதி ஜூலை மாதம் 2012 மதியம் 12 மணிக்கு
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பசில் ராஜபக்ச

அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு
மக்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்படுகின்றது.








(8/371)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்

## 16.07.2012 - 16.08.2012



## கும்பம்

**அவிட்டம் 3, 4, பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்**

**எண்ணங்கள் நிறைவேற இறை வழிபாடு தேவை!**

**திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிக்க வேண்டும் என்று சொல்லும் கும்ப இராசி நேயர்களே!**

எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பவர்கள் நீங்கள். நிறைய சம்பாதிக்க வேண்டும், நிறைய சேமிக்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்குண்டு. அமைதியாக நீங்கள் இருந்தாலும், ஆழமாக சிந்திப்பீர்கள். மற்றவர்களின் நிறை- குறைகளை நேருக்கு நேராகச் சொல்வதால் அவர்களின் வெறுப்புகளுக்கு ஆளாவதும் நீங்கள் தான்.

உங்களுக்கு இந்த ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமத்தில் சனியும், செவ்வாயும் இணைந்து செயற்படுகிறார்கள். எனவே, திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லலாம். திடீர் திடீரென குணங்கள் மாறி செய்வதறியாது திகைப்பீர்கள். கேது பலத்தால் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தாக்குதல் ஏற்பட்டு அகலும். உள்ளத்தில் உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். முன்கோபத்தின் வாயிலாக நல்ல வாய்ப்புகளை நழுவவிட்டு விடுவீர்கள். துலாம் இராசிக்கு சனிப் பெயர்ச்சியாகும் வரை கவனமுடன் செயற்படுவது நல்லது. எதிலும் அகலக்கால் வைக்காமல் நிதானத்தோடு செயற்பட்டால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபட்டு வருவதோடு அங்காரகனையும் வழிபட்டு வருவதன் மூலம் தங்குதடைகள் அகலும். தக்க விதத்தில் குடும்ப ஒற்றுமையும் கூடும். சுப காரியப்பேச்சுகளும் முடிவாகலாம்.

**மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்**

ஜூலை 29 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4,9 க்கு அதிபதியான சுக்ரன் 5 இல் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல சம்பவங்கள் நடைபெறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் தீரும். வள்ளல்களின் ஒத்துழைபோடு வருங்கால நலன்கருதி சில முக்கிய முடிவெடுப்பீர்கள். கூட்டாளிகள் விலகினாலும் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

**கடக புதனின் சஞ்சாரம்!**

## நல்ல சம்பவங்களே நடைபெற வாய்ப்பிருக்கிறது பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் தீரும்

பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் ஆறில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பாதியில் நின்ற கட்டிட பணியை மீதியும் தொடர்வீர்கள். கடன் வாங்கியாவது சொத்து வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.


**சிறப்பு தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 14 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3,10 க்கு அதிபதி 9 இல் சஞ்சரிப்பது யோகம் தான். பணத் தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து கொள்வீர்கள்.

இம்மாதம் சனிக்கிழமைதோறும் எள்தீபம் ஏற்றி, சனீஸ்வரரை வழிபட்டு வருவதோடு, ஆதியந்த பிரபுவையும் வழிபடுவது நல்லது.

குடும்பச்சுமை கூடும். கொள்கை பிடிப்புடன் செயற்பட இயலுமா? என்பது சந்தேகம்தான். விரயங்கள் அதிகரிக்கும். குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்தினால் தான் அவர்களால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விலக இயலும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாக வடிவேலன் வழிபாட்டையும், வண்ணத்தில் கறுப்பாக உள்ள சனி பகவான் வழிபாட்டையும் மேற் கொள்ளுங்கள்.

### ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி**

**பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை சேரும்!**

**விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவ்ர்களாக விளங்கும் மீன இராசி நேயர்களே!**

நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். நாணய பாதிப்பு ஏற்படாமல் வாழவேண்டும் என்று சொல்வீர்கள். கூட்டுக் குடும்ப வாழ்க்கை உங்களுக்குப்பிடிக்காது. தனக்குக் கீழே பணி புரிபவர்களிடம் அதிகம் வேலைவாங்க வேண்டும் என்று நினைப்பீர்கள். கணக்கில்லாத நண்பர்களை பெற்றிருந்தாலும் ஒரு சிலரிடம் மட்டுமே மனம்விட்டுப் பேசுவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சப்தமத்தில் சனியும், செவ்வாயும் இணைந்திருப்பதால், நிதானத்துடன் எதையும் செய்தால் தான் நிம்மதி கிடைக்கும். தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கோ மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். மாற்று மருத்துவம் பலன் கொடுக்கும். முடிவடைந்த வழக்குகள் மீண்டும் தலை தூக்கும் என்பதால் எதிரியிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், சுக்கிரனுடன் அல்லவா கூடியிருக்கிறார். எனவே, பெண் வழிப் பிரச்சினைகள் தலை தூக்கலாம். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம், நாடு மாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு வந்து சேரலாம். வரும் மாற்றங்களை சனி எட்டில் சஞ்சரித்த பிறகு உபயோகப் படுத்திக் கொள்வது நல்லது.

மாதத் தொடக்கத்தில் 6 க்கு அதிபதி 5 இல் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் தாமதம் ஏற்படும். நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வியாழன்தோறும் விரதமிருந்து குரு வழிபாட்டையும் மேற்கொள்வதன் மூலம் உங்கள் குடும்ப முன்னேற்றம் கூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 29 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள புதனுடன் அவர் இணைவதால் பழைய கட்டிடத்தை பராமரிக்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கிடைக்கும். சிலருக்கு புதிய கட்டிடங்கள் வாங்கும் யோகம் உண்டு. கலைத்துறையை சார்ந்தவர்களால் காரிய வெற்றி கிட்டும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். விருந்துகளிலும், விழாக்களிலும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**கடக புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சூரியனுடன் இணைகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வாங்கல், கொடுக்கல்கள் ஒழுங்காகும். அரசு வழிகளில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு.

**செவ்வாய்ப்பெயர்ச்சி காலம்!**

இக்காலம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலமாகும். எட்டில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, எச்சரிக்கையோடு இல்லாவிட்டால், எதிலும் சிக்கல்கள் உருவாகும். குறிப்பாக நரம்பு, எலும்பு சம்பந்தப் பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். நாட்டுப்பற்று மிக்கவர்களால் தொல்லைகள் ஏற்படும். வாங்கிய சொத்துக்களை விற்க நேரிடும். வழிபாடு இக்காலத்தில வளர்ச்சியைக் கூட்டும்.

இம்மாதம் சர்ப்ப கிரகங்களுக்குரிய தெய்வ வழிபாட்டை மேற்கொள்வதோடு, துர்க்கை வழிபாட்டையும் மேற் கொள்ளுங்கள்

சனி, செவ்வாயின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் விரயங்கள் அதிகரிக்கும். வீட்டில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. சேமிப்பில் சிறிது கரையும். கணவன்- மனைவிக்குள் கனிவு அதிகரிக்க, விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. நோய்களை சந்திக்காமல் இருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை கண்டு மகிழும் நேரமிது. வீடு மாற்றம் ஒரு சிலருக்கு எதிர்பார்த்தபடி அமையும்.

## உங்கள் குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும் விலகிப் போன சொந்தங்கள் விருப்பி வருவர்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

union assurance
Trust in your tomorrow, today


# யூனியன் அஷ்யூரன்ஸின் 2011 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வில் யாழ்.பிராந்திய கிளையினால் பெற்ற விருதுகளும் வெற்றியாளர்களும்



N.SUGUNAN
Regional manager
(BEST REGIONAL OFFICE)
அதிசிறந்த பிராந்திய காரியாலயம்


G.SRIVARATHAN
BEST SALES MANAGER
Full Gold
அதிசிறந்த விற்பனை முகாமையாளர்
அகில இலங்கையில் 1 ஆம் இடம்



S.VAISHNAVI
அதிசிறந்த விற்பனை ஆலோசகர்
(BEST NEW BUSINESS PRODUCER)
MDRT WINNER- AMERICA
(COURT OF THE TABLE) MRRT
FULL GOLD LIMRA-IAP LIMRA-IQA
அகில இலங்கையில் 1 ஆம் இடம்


A.ANTON JANOSAN
(1st RUNNER UP)
Full Gold
சிறந்த விற்பனை முகாமையாளர்
அகில இலங்கையில் 2 ஆம் இடம்


N.PRAGASH
MDRT WINNER



M.JEYAMATHAN
MDRT WINNER


T.ELANKESWARAN
JUNIOR SALES EXECUTIVE (1st RUNNER-UP)


K.VIMALATHEESAN
FULL GOLD


S.SUGANYA
FULL GOLD



J.JEGATHEESWARAN
FULL GOLD (LIMRA -IAP)


S.THURUPARAN
FULL GOLD


S.JEYAMATHY
FULL GOLD


T.RAJENDRAMOHAN
FULL GOLD



K.THEVAJINI
FULL GOLD


S.KIRITHARAN
FULL GOLD


P.SRIRATHY
FULL GOLD


U.JEYAKUMAR
FULL GOLD



S.SAROJINI
FULL GOLD


V.RAVIRAJ
HALF GOLD


S.AMUTHA
HALF GOLD


S.SOBANA
HALF GOLD


K.NISHANTHINY
HALF GOLD


I.KASTRO
MERIT


S.MATHINA
MERIT


S.PRAVEENA
MERIT


P.SATHYAPRATHAP
MERIT


V.PRIYATHARSINI
MERIT


K.NIRUJAN
MERIT

வாழ்த்துவோர்:-
யாழ்.பிராந்திய முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்

(சி-068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 193

### குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதும் இராணுவ வெறிகொண்ட ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதியும்


கின்ஜி கெற்றனக்கா

...சோவியத் பசுபிக் சமுத்திரக் கடற்கரையின் தீவிர நடவடிக்கையின் போது அமெரிக்க-பிரிட்டிஷ் கடற்படை ஜப்பானியக் கடற்படைச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தைக் கிட்டத்தட்ட கைவிட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது போதாதென்று வடகொரியாவின் துறைமுகங்களும் கடற்படைத் தளங்களும் இருந்த பிரதேசத்தில் அமெரிக்கர்கள் ஏராளமான கண்ணிவெடிகளை வைத்தனர். நகின், தால்ஸ்த்ரோய் போன்ற பெரிய போக்குவரத்து கப்பல்கள் உட்பட ஒரு சில சோவியத் கப்பல்கள் இதில் சிக்குண்டு பாதிக்கப்பட்டன.


குவாண்டுங் இராணுவத்தை முறியடிக்கும் நடவடிக்கையில் மங்கோலிய மக்கள் குடியரசின் துருப்புகள் சோவியத் இராணுவத்தோடு தோளோடு தோள் நின்று போரிட்டன. சோவியத் யூனியன், மங்கோலிய மக்கள் குடியரசின் மீது பன்முறை படையெடுத்தபோது எதிரியாகிய இராணுவ வெறி கொண்ட ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் யூனியனுக்கும் மங்கோலியாவிற்கும் இடையிலான வீர ஒத்துழைப்பு மேலும் வலுவடைந்ததற்கான தெள்ளத்தெளிவான சான்றாக இது


ஜப்பான் சரணடைதல் விதி முறைகளை கேட்டுக்கொள்ளல்

விளங்கியது.

மங்கோலிய மக்கள் புரட்சிக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகிய த்ஸெதெம்பால் இரு சோதர இராணுவங்களின் போர் வீரர்களுக்கும் இடையிலான வீர ஒத்துழைப்பைப் பலப்படுத்த பெரிதும் பாடுபட்டனர்.

சோவியத் துருப்புகள் குவாண்டுங் இராணுவத்தை முறியடித்ததன் பயனாய் ஏகாதிபத்திய ஜப்பான் நிபந்தனையின்றி சரணடையும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. குவாண்டுங் இராணுவத்தை சோவியத் துருப்புகள் முறியடித்ததானது, இராணுவ வெறி கொண்ட ஜப்பான் முழு இராணுவ தோல்வி அடைவதில் தீர்மானகரமான பங்காற்றியது. இராணுவ வெறி கொண்ட ஜப்பான் சரணடைந்ததை அடுத்து இரண்டாவது உலக யுத்தத்தின் கடைசி பிறப் பிடம் ஒழித்துக் கட்டப்பட்டது. நீண்டகாலமாக உலகம் முழுவதும் எதிர்பார்த்த சமாதானம் வந்தது. 1955 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தலைமை குழுவின் ஆணையின் படி ஜப்பானின் மீதான வெற்றிக்கான விருது


[illegible]

ஏற்படுத்தப்பட்டது.

1945 ஆம் ஆண்டு தொலை கிழக்கில் சோவியத் இராணுவம் அடைந்த வெற்றியானது, அனைத்துலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதானது, ஜப்பானை சரணடையுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. எந்தத் தாக்குமுனைகள், இராணுவத் தளங்களிலிருந்து சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பிற்குப் பல ஆண்டுகளாக ஜப்பான் தயாராகி வந்ததோ அவையனைத்தையும் அது இழந்தது. ஆண்டாண்டு காலமாக ரஷ்யர்களின் பூமியாக இருந்த தென் ஸகாலீனையும் குரீல் தீவுகளையும் சோவியத் இராணுவம் தாய்நாட்டிற்கு மீட்டுத் தந்தது.

எதிரிக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. சுமார் 84,000 போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். 5 இலட்சத்து 93 ஆயிரத் துக்கும் அதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டனர். ஏராளமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

தொலைகிழக்கில் ஜப்பானியச் சக்திகள் விரைவாக முறியடிக்கப்பட்டதானது, நூறாயிரக்கணக்கான அமெரிக்க, பிரிட்டிஷ், அவுஸ்திரேலிய, இந்திய, சீனப்போர் வீரர்களின் உயிர்களைக் காப்பாற்ற உதவியது. சோவியத் யூனியனின் வட கிழக்கு சீனாவை விடுவித்ததன் மூலம் சீன மக்களை அடிமைப்படுத்த சர்வதேச ஏகாதிபத்தியமும் குவோமிண்டான்வாதிகளும் தீட்டிய திட்டங்களைக் குலைத்தன. நவீனக் காலனியாதிக்கம் மஞ்சூரியாவில் புகுவதற்கு மிக வசதியான பாதைகளாகிய போர்ட்ஆர்தர் மற்றும் தால்னிய் துறைமுகம் சோவியத் இராணுவத்தால் உறுதியாக மூடப்பட்டன.

சோவியத் துருப்புகள் மங்கோலிய மக்கள் புரட்சி இராணுவத்துடன் சேர்ந்து, சீன மக்கள் விடுதலைச் சக்திகள், கொரிய கெரில்லாப் படை வீரர்கள் ஆகியோரின் பங்கேற்போடு விடுவித்த மஞ்சூரியா நாட்டு புரட்சிகரச் சக்திகளின் நம்பகரமான இராணுவப்- போர்த்தந்திர தாக்கு முனையாக, சீனப்புரட்சியின் புதிய அரசியல் மையமாக மாறியது. மஞ்சூரியாவில் இருந்த புரட்சித் துருப்புகளிடம் சோவியத் யூனியன் வழங்கிய ஆயுதங்களும் ஆயுதத் தளபாடங்களும் போதுமான அளவில் இருந்தன. இரண்டு சோவியத் சேனைகளிடமும் 3700க்கும் அதிகமான சாதாரண மற்றும்


ஜப்பான் தளபதி
டொச்சி ரவுன்ரோன்

மார்டர் பீரங்கிகள், 600 டாங்கிகள், 680 பல்வேறு விதக் கிடங்குகள் மற்றும் சுன்காரி இராணுவ பிளீட்டின் எல்லாக் கப்பல்கள் ஆகியவை இருந்தன. இவையனைத்தும் சீன மக்கள் விடுதலை இராணுவத்தை மறு ஆயுதந்தரிக்கும் வாய்ப்பையளித்தன. சோவியத் ஆயுதங்களில் ஒரு பகுதியும் அதற்களிக்கப்பட்டது.

இந்தத் திட்டவட்டமான உதவி எண்ணிக்கையிலும் தரத்திலும் வலுவடையவும் கெரில்லா முறையிலிருந்து நிரந்தர இராணுவத்தை ஏற்படுத்த மாறிச்செல்லவும் சீன மக்கள் விடுதலை இராணுவத்திற்கு உதவியது. 1945 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 5 இலட்சத்து 22 ஆயிரம் போர் வீரர்கள், கமாண்டர்களில் 3 இலட்சத்து 97 ஆயிரம் நபர்கள் வட சீனாவில் இருந்தனர் என்று கூறுவதேபோதுமானது. மஞ்சூரியாவிலிருந்துதான் இவர்கள் 1947- 1949 இல் குவோமிண்டான் துருப்புகளுக்கு முதல் கடும் தோல்விகளை ஏற்படுத்தினை. அழுகிப்போன ஷாங்காய் ஷேக் ஆட்சியிடமிருந்து சீனா முழுவதையும் விடுவிக்க இவர்கள் வழிகோலின. மா சே துங் அக்காலத்தில் பின்வருமாறு எழுதினார். ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடிப்பதில் சீன மக்களுக்கு உதவுவதற்காக செஞ்சேனை வந்துள்ளது. சீன வரலாற்றில் இதைப்போன்றதொரு எடுத்துக்காட்டு இருந்ததில்லை. இச்சம்பவத்தின் செல்வாக்கு மதிப்பிடப்பட முடியாதது.

(தொடரும்)

## இராணுவ ஜப்பானின் தோல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலையில் நிபுணத்துவ சேவை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள 184 சாதாரண வைத்தியர்கள் தனியார் மருத்துவமனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அண்மையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது அரசாங்கத்தின் தலைவரான மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை மருத்துவர்கள் 184 பேர் கடந்த ஏப்ரல் மாதமளவில் இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளார்கள்.

இலங்கை வைத்தியர்களில் வெளிநாட்டு வைத்தியர்கள் கடமையாற்றுவதற்கு மருத்துவ ஒழுங்கு விதிகளில் 67 ஏ பிரிவின் கீழ் தற்காலிகமாக பதிவு செய்ய வேண்டும்.

இந்த அடிப்படையில் பதிவு செய்துள்ள சாதாரண மருத்துவர்கள் தான் தனியார் மருத்துவமனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்விடயத்தை நாம் அறிந்தும் உடனடியாக சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள வைத்தியத்துறை விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவதற்குரிய தகுதி தொடர்பான பரிசோதனை செய்யுமாறு கேட்டுக்கொண்டோம்.

இதனடிப்படையில் சுகாதார அமைச்சு வெளிநாடுகளில் இருந்து வந்து தனியார் மருத்துவமனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடும் மருத்துவர்களின் பகுதியை பரிசோதிக்கும் வேலைத் திட்டத்தை மே மாதம் ஆரம்பித்தது.

இதற்கேற்ப கிடைக்கப்பெற்ற 18 பேரின் விண்ணப்பப்படிவங்கள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. இதன்படி இந்த 18 பேரும் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவதற்கு தேவையான எந்தத் தகுதியையும் கொண்டவர்களாக இல்லை என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் இவர்கள் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள வைத்தியர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிறுவர் பெண் நோயியல், சத்திர சிசிக்சைகள் கண், காது, மூக்கு, எக்ஸ்ரே துறைகளுக்கான விசேட நிபுணத்துவ மருத்து சேவையில் ஈடுபடுகின்றனர்.

தகுதியில்லாதவர்கள் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவதால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்றார். (அ-2)

# தாயும் மகளும் தீக்கிரையாகினர்

## கஹாவத்தையில் சம்பவம்

(கொழும்பு)

இரத்தினபுரி கஹாவத்தையில் மற்றுமொரு இரட்டைக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கஹாவத்தை பிரதேசத்தில் மற்றுமொரு தாயும் மகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீடு எவ்வாறு தீப்பற்றியது என்பது பற்றிய தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

கஹாவத்தை கொடகதென்ன என்னும் பிரதேசத்தில் 63 வயதான தாயும் 32 வயதான மகளும் இவ்வாறு எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப தபால் சேவை சீரமைக்கப்படும்

## தபால் சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வழமையான தபால் சேவைக்குப் பதிலாக புதிய சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கு தபால் சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் தபால் சேவைகள் குறித்து காலி மாவட்ட மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்திலேயே அமைச்சர் ஜீவன் குமாரதுங்க இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தபால் சேவையை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் நோக்கில் பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

தபால் மூலம் வடக்கு- கிழக்கு, கிராமம்- நகரம் போன்றவற்றை இணைக்கும் பாலமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12 தபால் அலுவலகங்களை மையமாக வைத்து இணைய வலைப்பின்னல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே நாட்டின் சகல தபாலகங்களுக்கும் இந்த இணைய வசதிகள் விஸ்தரிக்கப்படும்.

பொதுமக்களின் சேவையான தபால் சேவை 250 வருட பழைமை வாய்ந்ததாகும்.

எனவே இன்றைய தொழில்நுட்ப வசதிகளுக்கமைய இச்சேவையை விஸ்தரித்து அதற்கு புத்துயிர் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பாதுகாப்புச் செயலாளரின் பெயரை பயன்படுத்தி கப்பம்கோரிய பொலிஸார்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளரின் பெயரைப் பயன்படுத்தி கப்பம் கோரிய மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மற்றுமொரு நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்களே இவ்வாறு கப்பம் கோரியுள்ளதாக தெரியவருகின்றது.

மொஹமட் ரிஸ்வி என்ற நபரை விடுதலை செய்வதற்கு ஒரு கோடி ரூபா கப்பம் கோரியதாகவும் இதில் அறுபது இலட்சம் ரூபா ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பம் கோரல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட போது முஹமட் ரிஸ்வி என்பவரை கைது செய்ததாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். (அ-2)



யாழ். வண்ணார்பண்ணை வடகிழக்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவின் போது...

# விசர்நாய் 30 பேரை கடித்தது வவுனியாவில் பரபரப்பு

(வவுனியா)

வவுனியா நகரில் விசர் நாயொன்றினால் கடிபட்ட சுமார் 30 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நாய் வீதியில் காண்போரையெல்லாம் கடித்ததால் நேற்று மாலை மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதியில் இந்நாய் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-2)

# சட்டவிரோத ஆட்கடத்தலுடன் எனக்கு தொடர்பில்லை

## ஊடகங்களின் செய்திக்கு நாமல் மறுப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்பு கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என மறுத்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில தமிழ் இணைய ஊடகங்கள் தமது பெயரை சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தியுள்ளனர்.

நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் கற்பிக்கும் நோக்கத்தில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்குக் கிழக்கு அபிவிருத்தித்திட்டங்களில் மட்டுமே தாம் பங்கேற்று வருவதாகத் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர் யுவதிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற வேளையில் தீய நோக்கங்களைக் கொண்ட சில தரப்பினர் திட்டமிட்ட வகையில் மீண்டுமொரு தடவை தமக்கு எதிராக சேறுபூறும் முயற்சியாக இந்தக் குற்றச்சாட்டுக்களை நோக்குகின்றேன்.

வடக்குக் கிழக்கு மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் வழங்கி வருவதாகவும் உயிரையும் பணயம் வைத்து அவுஸ்திரேலியா நோக்கி பயணம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது எனவும் தெரிவித்தார்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மக்களுக்காக பல்வேறு அபிவிருத்திட்டங்களும்



ஜீவனோபாய மேம்பாட்டுத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு ஆட்களை அனுப்பிய பதின்னான்கு பேர் கைதாகினர்

(கொழும்பு)

கடல் மார்க்கமாக சட்டவிரோத மான முறையில் அவுஸ்திரேலியா விற்கு ஆட்களை அனுப்பும் நட வடிக்கையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 14 பேர் குற்றப்புலனா ய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்குடா மற்றும் திருகோண மலை ஆகிய கடல் பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்களுக்கு வெளிநாடு செல்ல வசதிகளை ஏற்படுத்தி கொடு த்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ள தாக அந்தத் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

ஜூலை மாதத்தின் கடந்த சில நாட்களில் மாத்திரம் சட்டவிரோத மான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 334 பேர் கடற் படையினரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இதற்கமைய மட்டக்களப்பு கடல் பகுதியில் வைத்து நேற்றைய தினம் 41 பேர் கைது செய்யப்பட்டிருந்த னர். இதனைத் தவிர கல்குடா பகுதி யில் வைத்து கடந்த 13 ஆம் திகதி 109 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்கு முற் பட்ட 61 பேர் கடந்த வியாழக்கிழமை திருகோணமலை பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# மன்னார் ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை

மன்னாரில் இடம்பெற்ற ஆர்ப் பாட்டத்தின்போது ஏற்பட்ட அமை தியின்மை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 18 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

மன்னார் கோந்தைப்பிட்டி மீனவ துறைமுகப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு மன்னார் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக நேற்று முன்தினம் பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நட த்தப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்கா ரர்கள் மேற்கொண்ட கல் பிரயோ கத்தில் நீதவான் நீதிமன்றம் மற் றும் மேல் நீதிமன்றம் என்பவற் றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நீத வானை அவமதிக்கும் வகையில் எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு அவர் களை கலைப்பதற்கு கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸார் கூறினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக் குதல்களில் காயமடைந்த மூன்று பொலிஸ் அதிகாரிகள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதுடன் அவர்கள் தொடர்ந் தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரி வித்துள்ளார். (அ-2)

# பாலியல் வல்லுறவு குற்றவாளிகள் இருவருக்கு பத்து வருட சிறை

மஹரகமவில் ஆடைத்தொழி ற்சாலையில் பணியாற்றும் பெண் ணொருவரை பாலியல் வல்லுற வுக்குள்ளாக்கியதாக குற்றம் சுமத் தப்பட்ட இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன் தினம் 10 வருட சிறைத்தண்டனை விதித்தது.

களுகே சரத் சந்திரசிறி, மொஹ மட் சமூர்டீன் ஆகிய இருவருக் குமே இத்தண்டனை விதிக்கப்பட் டது. மேற்படி நபர்கள் இருவரும் 1999.10.24 ஆம் திகதி ஆடைத் தொழிற்சாலை ஊழியரான இளம் பெண் ஒருவரை பலவந்தமாக கடத்திச் சென்று பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி பந்துல கே.அத்தபத்துவினால் இவர்களுக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் பாதிக் கப்பட்ட பெண்ணுக்கு தலா 25 ஆயிரம் ரூபா நட்ட ஈட வழங்கு மாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

நட்ட ஈட்டுத் தொகையை செலு த்தத் தவறினால் மேலும் 12 மாதங் கள் சிறைத்தண்டனை அனுபவி க்க வேண்டும் என நீதிபதி உத்தர விட்டார். (அ-2)

# கதிர்காம கந்தனுக்கு நேற்று கொடியேற்றம்

(கொழும்பு)

புனித கதிர்காமக் கந்தன் வரு டாந்த உற்சவகம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம் பமாகியுள்ளது. இதனையொட்டி எசல பெரகரா வைபவமும் இன் றிலிருந்து ஆரம்பமாகிறது.

இந்த உற்சவத்தில் கலந்து கொள் வதற்கென வடக்கு, கிழக்கிலிருந்து பாதயாத்திரையாக உகந்தை ஊடாக வருகை தந்த 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டோர் கதிர்காம கோயிலை வந்தடைந்துள்ள தோடு நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற் பட்டுள்ளதை தொடர்ந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தரு வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

பெரகரா செல்லும் வீதிகள் வர்ண மின்குமிழ்களால் அலங்க ரிக்கப்பட்டு வீதிகள் செப்பனிடப் பட்டு பௌத்த கொடிகள் பறந்த வண்ணம் காட்சியளிக்கின்றன. பிரதான தீ மிதிப்பு வைபவம் இம் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி தீர்த் தோற்சவம் இடம்பெறும். இந்நிகழ் வுகளில் தென்னிந்திய பக்தர்க ளும் வருகை தந்து கலந்து கொள் வதும் விசேட அம்சமாகும். (அ-2)




★ 1618-புளூட்டோ பூமிக்கு மிக அண்மைக்கு வந்தது. மீண்டும் இது 2113 -ல் நிகழும்.

★ 1935-இந்தியாவில் லாகூரில் முஸ்லிம்களு க்கும் சீக்கியர்களுக்கும் இடை யில் இடம்பெற்ற கலகத்தில் பலர் கொல்லப்பட்டனர்.

★ 1944- இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாம் தீவை அடைந்தன.

★ 1949-19 மாதப் போரின் பின்னர் இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்தத்துக்கு உடன் பட்டன.

★ 1953 -யூனிசெப் அமைப்பை நிரந்தரமாக் கும் முடிபு ஐ.நாவில் எட்டப்பட்டது.

★ 1954-வியட்நாமை இரண்டாகப் பிரிக்கும் உடன்பாடு ஜெனீவாவில் எட்டப்பட்டது.

★ 1960-இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானார். இவரே நாடொன்றின் தலைவராகத் தெரிவான முதற் பெண் ஆவார்.

★ 1969-அப்பலோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்றோங் எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தனர்.

★ 1976-வியட்நாம் போர்: அமெரிக்கப் படை தாய் லாந்தில் இருந்து முற்றாக வெளியேறல்.

★ 1976-வைக்கிங் 1 சந்திரனில் இறங்கியது.

★ 1979-இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.


★ 1989-பர்மாவின் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சான் சூ கீ இராணுவ ஆட்சியால் வீட்டுக் காவலில் வைப்பு.

பிறப்புக்கள்

★ கி.மு.356- அலெக்சாந்தர் கிரேக்க மன்னன்

★ 1919-சேர் எட்மண்ட் ஹில்லறி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மனிதர். நியூசிலாந்தின் மலையேறி.

★ 1923-மு.சிவசிதம்பரம் ஈழத் தமிழ்த் தலைவர்



**மு. சிவசிதம்பரம்**

(முருகேசு சிவசிதம்பரம்) இலங்கைத் தமிழர் மத்தி யில் தோன்றிய புகழ்பெற்ற அரசியல் தலைவர்களுள் ஒருவர். இவர் ஒரு வழக்கறி ஞர். யாழ்ப்பாணம் கரவெட் டியைச் சேர்ந்தவர்.

இவரது நேரடியான அரசியல் ஈடுபாடு 1956 -ம் ஆண்டு தொடங்கியது. அவ்வாண்டு இடம்பெற்ற தேர்தலில், தோல்வியடைந்தார். பின்னர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்த சிவசிதம் பரம் அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.

1960-ல் நடைபெற்ற தேர்தலில் உடுப்பிட்டித் தொகு தியில், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்டு வெற் றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். 1961-ம் ஆண்டில் இலங்கை அரசின் தமிழர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து தமிழ ரசுக் கட்சி அறவழிப் போராட்டம் நடத்திய போது கட்சி வேறுபாடுகளை மறந்து சிவசிதம்பரமும் அப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1965 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்ற இவர், அப்போதைய நாடாளு மன்றத்தில் துணைச் சபாநாயகராகவும் பணியாற்றினார்.

1970இல் நடைபெற்ற தேர்தலில் இவர் தமிழரசுக் கட்சி வேட்பாளரிடம் சொற்ப வாக்கு களால் தோல்வியடைந்தார். எனினும் இலங் கைத் தமிழர் அரசியல் கட்சிகளிடையே ஒற்று மையை ஏற்படுத்தித் தமிழர் கூட்டணி என்னும் அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்களில் சிவசிதம்பரமும் ஒருவர்.

1977 -ம் ஆண்டுத் தேர்தலில் ஒன்றுபட்ட தமி ழ்க் கட்சிகள் கூட்டணியில் நல்லூர்த் தொகு தியில் போட்டியிட்ட சிவசிதம்பரமும் வெற்றி பெற் றார். ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் ஆகியோர் காலமான பின்னர் தமிழர் கூட்டணியின் தலைமைப் பதவியை இவர் ஏற்றார். எனினும் தமி ழர் அரசியலில் தீவிரவாதப் போக்கு வலுவடைந்து வந்ததால் மக்கள் மத்தியில் சிவ சிதம்பரம் போன்ற மிதவாதிகளின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. எனினும் அவ்வப்போது சிவசிதம்பரத்தின் பணி தொடர்ந்தே வந்தது. 2001-ம் ஆண்டுத் தேர்தலின் பின் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் சார்பில் நியமன உறுப்பி னராக இவர் நாடாளுமன்றம் சென்றார். இவர் 05.06.2002இல் காலமானார்.



பேரரசன் அலெக்சாந்தர் அல்லது மகா அலெக் சாண்டர் (Alexander the Great) கிரேக்கத்தின் பகுதியான மக்கெடோனின் மன்னன். இவன் ஈடுபட்ட எந்தப் போரிலும் தோல்வியடைந்ததில்லை எனவும் சொல்லப்படுகிறது. இவனது காலத்தில் பண்டைய கிரேக்கர்களுக்குத் தெரிந்த உலகின் பெரும் பகுதி யைக் கைப்பற்றி ஆண்டான்.

அலெக்சாண்டர் அவனது தந்தை 2ஆம் பிலிப் இறந்த பின்னர் மக்கெடோனின் மன்னனாக முடி சூடிக் கொண்டான். பிலிப் மன்னன் பண்டைய கிரேக் கப் பெரு நிலப்பரப்பைச் சேர்ந்த பல நகரங்களை மக்கெடோனிய ஆட்சியின் கீழ் ஒன்றிணைத்தான். அலெக்சாண்டர் கிரேக்கத்தின் தெற்குப் பகுதி நகரங் களை முறியடித்து அவைகளை மக்கெடோனிய ஆட்சியின் கீழ் இணைத்தான். பின்னர் கிழக்குப் பகுதியில் அக்கீமனிட் பாரசீகப் பேரரசைக் கைப்பற் றினான். இவன் அனித்தோலியா, சிரியா, பினீசியா, காசா, எகிப்து, பாக்ட்ரியா, மெசொப்பொத்தேமியா ஆகிய நாடுகள்ளக் கைப்பற்றியது மட்டுமல்லாமல் தனது பேரரசின் எல்லைகளை இந்தியாவின் பஞ் சாப் வரை நீட்டியிருந்தான்.

இவன் இறப்பதற்கு முன்பே, அரேபியக் குடாநாட் டுக்குள் தனது வணிக நடவடிக்கைகளையும் படை நடவடிக்கைகளையும் விரிவாக்குவதற்குத் திட்டமிட் டிருந்தான். இதன் பின்னர் மேற்கே கார்த்தேஜ், ரோம், ஐபீரியக் குடாநாடு ஆகியவற்றை நோக்கிச் செல்லவும் அவனிடம் திட்டம் இருந்தது. அலெக் சாண்டர் பல வெளிநாட்டவர்களை தனது படையில் சேர்த்திருந்தான். இதனால் சில அறிஞர்கள் இவன் இணைப்புக் கொள்கையை கடைப்பிடித்தான் என்றனர். தனது படை வீரர்களையும் பிற நாட்டுப் பெண்களை மணம் செய்யுமாறு ஊக்கப்படுத்தினான். அவனும் கூட 2 வெளிநாட்டு இளவரசிகளை மணம் செய்தான்.

தொடர்ந்து அலெக்சாண்டர் மேற்கொண்டு முன் னேற வீரர்களை தயார் படுத்தலானார். ஆனால் அவரது தளபதி கொயேநூஸ் அலெக்சாண்டருடன் வாக்கு வாதம் செய்து அவரது எண்ணத்தை மாற்றினார். அந்தத் தளபதி அலெக்சாண்டரிடம் நமது படை வீரர்கள் தங்களது பெற்றோரையும் மனைவியரையும் குழந் தைகளையும் விட்டு பிரிந்து வந்து பல வருடங்கள் ஆகிறதென்றும் அவர்களுக்கு வாழ்வில் மிச்சமு ள்ள நாட்களை அமைதியாக செலவிட அனுமதிக்க வேண்டுமென்றும் அனைவரையும் தாயகம் திரும்ப அனுமதிக்க வேண்டுமென்றும் விவாதித்தார்.

இதனால் ஒருவழியாக அலெக்சாண்டர் தெற்கு நோக்கி திரும்ப சம்மதித்தார்.

எக்பட்டானா-விற்கு திரும்பிய பின்பு அலெக் சாண்டர் பாரசீகத்தின்(ஈரான்) கருவூலத்தை மீட்டெ டுத்தார். இவரது நெருங்கிய இரகசிய தோழனான ஹெபெஷன் மர்மமான முறையில் இறந்தார். அவர் உடல் நலமின்றி இறந்தாலும் நஞ்சூட்டப்பட்டு கொல்லப் பட்டதாகவும் சான்றுகள் இருந்தமையால் அலெக் சாண்டர் மிகவும் மனம் வெதும்பினார்.

அலெக்சாண்டர் ஹெபெஷனின் மரணத்தினால் குலைந்து போனார். மேலும் துணைவனும் தோழனு மான ஹெபெஷனின் ஈமச் சடங்கிற்கு பாபிலோனில் மிக்க பொருட் செலவில் ஏற்பாடுகள் செய்ய கட்டளை யிட்டார். இதன் பின்னர் மீண்டும் ஒரு பெரிய அளவி லான போர்த் தொடருக்கு அலெக்சாண்டர் திட்டம் தீட்டினார். ஆனால் அவற்றை எல்லாம் ஆரம்பிக்கும் முன்பே அவர் மரணித்தார்.

12 ஆண்டு காலத் தொடர்ச்சியான படை நடவடிக்கை களுக்குப் பின்னர் அலெக்சாண்டர் காலமானார். இறப்புக்கான காரணம் இன்னும் தெளிவில்லை.

கி.மு. 323இல் யூன் 10 அல்லது 11 ஆம் நாளில் தனது 32-வது வயதில் அலெக்சாண்டர் பாபிலோ னிலுள்ள இரண்டாம் நெபுகன்ட்நேசர் மாளிகையில் உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெசோ மாநாடு...!

## யாருக்கு யார் வைக்கும் 'செக்'

...கூடவே இருக்கும் நண்பனாக இருந்தாலும், கருணாநிதியின் டெசோ மாநாட்டையோ அதன் இலட்சியத்தையோ மத்திய



சேர்ப்பதற்கு மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என நம்பப்படுகிறது.

பிரிவினைவாத தமிழ் பற்றார்வக் குழுவினரும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், மக்களிடையே பிரிவினைவாதப் போக்கினை தொடர்ந்து வளர்த்து வருவதுடன், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அடித்தளம் அமைத்து வருவதால், இந்திய ஒருமைப்பாடு சிதையும் சூழல் உள்ளது.

அதனால், பொது அமைதிக்கு தொடர் அச்சுறுத்தல், குந்தகம் விளைவிப்பதாகக் கருதி, விடுதலைப் புலிகளை சட்டவிரோதமான அமைப்பாக, மத்திய அரசு அறிவித்துள்ளது.

சம்பவங்களல்ல.

இந்த அறிக்கைகளில் விடுதலைப் புலிகள் மீதான தடைக்கான நியாயங்களை மட்டும் மத்திய அரசு குறிப்பிடவில்லை.

அதற்கும் அப்பால் தமிழீழம் என்பது இந்தியாவின் இறைமைக்கு ஆபத்தானது- அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது என்ற கருத்து துலாம்பரமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழருக்கு என தனிநாட்டை உருவாக்கும் நோக்கம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமையும் என்றும், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அடித்தளம் அமைத்து வருவதால், இந்திய ஒருமைப்பாடு

தாவை தூண்டிவிட்டு, கருணாநிதி மீது நடவடிக்கை எடுக்க வைக்க முனைகிறது.

அதேவேளை, கருணாநிதியின் டெசோ மாநாட்டை ஜெயலலிதா தடுத்துவிட்டால், விவகாரம் வேறு பக்கம் திரும்பும். ஈழத்தமிழரை ஆதரிப்பது குற்றமா? ஈழத் தமிழருக்கு தனிநாடு கேட்பது குற்றமா? என்று கருணாநிதி குரல் எழுப்புவார்.

அது இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான, ஜெயலலிதாவின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டை கேள்விக்குள்ளாக்கிவிடும். இதனால் கருணாநிதிக்கு எதிராக ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டாலும் டெசோ மாநாட்டின் மீது கைவைக்க முயற்சிக்க மாட்டார்.

அப்படி கை வைப்பதானால் கூட, அதற்கு அவர் ஒன்றுக்கு பலமுறை யோசிக்க வேண்டியிருக்கும். எவ்வாறாயினும், இந்த மாநாட்டைக் குழப்புவதற்கு, மத்திய அரசு ஜெயலலிதாவைத் தூண்டிவிடத் தயங்காது.

**டெசோ மாநாடு இலங்கைத் தமிழருக்கு விடிவைத் தருமா இல்லையா என்பதல்ல விவகாரம். இதை வைத்து தமிழ்நாட்டில் நடத்தப்படும் அரசியல்தான் இன்றைய சூடான விவகாரம்.**

## கருணாநிதி சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாரா...?

அரசினால் ஏற்க முடியாது. தமிழீழம் என்பது இந்தியாவின் முதல் எதிரியாகவே பார்க்கப்படுகிறது.

ஒருவேளை தமிழீழம் உருவாகிவிட்டது என்று வைத்துக் கொண்டால்கூட, பாகிஸ்தானை விடவும் அதன் மீதே இந்தியா அதிக வன்மத்தைக் கொண்டிருக்கும்.

அதேவேளை, டெசோ மாநாட்டை நடத்தக்கூடாது என்று கருணாநிதியிடம் துணிச்சலோடு கூறும் தைரியமும் மத்திய அரசுக்கு இல்லை.

**உள்துறை அமைச்சின் அதிரடி**

இந்தக் காலகட்டத்தில் தான், கடந்த வாரம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட கலெக்டர்கள், தமிழக பொலிஸ் ஆணையர் மற்றும் சேலம், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி பிரதி பொலிஸ் ஆணையர்கள், கியூ பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு பொலிஸாருக்கு மத்திய உள்துறை அமைச்சின் இணைச் செயலர் தர்மேந்திர சர்மா ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

**தமிழருக்கு என தனி நாட்டை உருவாக்கும் நோக்கம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால், சட்டவிரோத நடவடிக்கை வரம்புக்குள் வருகிறது.**

விடுதலைப் புலிகள் தோல்வியடைந்த பின்னர்கூட, தனிஈழம் என்ற கொள்கையைக் கைவிடாமல், ஐரோப்பாவில் நிதி திரட்டியும், பிரச்சார நடவடிக்கைகள் வழியாகவும், தனிஈழம் அமைப்பதற்காக, மறைமுகமாக செயற்பட்டு வருவதுடன், சிதறிக் கிடக்கின்ற அதன் தலைவர்கள் அல்லது போராளிகளை ஒன்று

மேலும், வன்முறை மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் இந்திய மக்களின் பாதுகாப்புக்கு தொடர் அச்சுறுத்தலாக இருக் கிறது.

எனவே, 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, சட்ட விரோத அமைப்பாக அறிவித்து, இந்த அறிக்கை வெளியிடப்பட்டதும், உடனடியாக செயலுக்கு வரும். இவ்வாறு அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.



**விடுதலைப் புலிகள் மீதான தடை**

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா 1992 ஆம் ஆண்டில் முதல் முறையாகத் தடைவிதித்தது.

ராஜீவ்காந்தி கொலையை அடுத்து சரியாக ஒரு ஆண்டு முடிவில் இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தத் தடை நீடிக்கப்பட்டு வருகிறது. கடந்த மே மாதமே இந்த தடை நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதுபற்றிய தகவல் ஜூன் தொடக்கத்தில் வெளியானது.

ஆனால், அதை நடைமுறைப் படுத்தக் கோரும் உத்தரவு, கடந்த வாரம் தமிழ் நாட்டுக்கு அனுப்பப் பட்டதும், இரண்டு நாட்கள் கழித்து அதுபற்றி உள்துறை அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டதும் எதேச்சையான

சிதையும் சூழல் உள்ளது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது கருணாநிதி நடத்தப்போகும் டெசோ மாநாடு சட்டவிரோதமானது, இந்திய இறையாண்மைக்கு அச்சுறுத்தலானது என்பதே அது.

**டெசோவைத் தடுக்கும் உத்தி**

அதுமட்டுமன்றி மத்திய உள்துறை அமைச்சு தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது கடும் நடவடிக்கையை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கருணாநிதி நடத்தப்போகும் டெசோ மாநாடு ஒருபோதும் விடுதலைப் புலிகளைத் துதிபாடும் ஒன்றாக இருக்காது. ஏனென்றால், அவருக்குப் புலிகளை அவ்வளவாகப் பிடிக்காது. ஆனாலும், அவரது தமிழீழ ஆதரவு மாநாடு மத்திய அரசினால் சகித்துக் கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்காது.

கருணாநிதி டெசோ மார்நாட்டை நடத்துவதே மத்திய அரசை பயமுறுத்துவதற்குத்தான் என்று சில தமிழ் நாட்டுக் கட்சிகள் விமர்சிக்கின்றன.

இந்தக் கட்டத்தில் மத்திய அரசு, தான் நேரடியாக கருணாநிதி மீது கைவைக்காமல் தவிர்க்க முனைகிறது. அதனால்தான் ஜெயலலி

**இந்தியாவை மீறி தனிநாடு அமையுமா?**

விடுதலைப் புலிகள் மீதான தடையை காரணம் காட்டி, தனிநாட்டுக் கோரிக்கை இந்தியாவுக்கு எதிரானது என்பதை மத்திய அரசு வெளிப்படுத்தியுள்ளது.

தமிழருக்கென தனிநாடு ஒன்றை நிறுவ இந்தியா ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

அதேவேளை, இந்தியாவின் உதவி அல்லது அங்கீகாரம் இல்லாமல் தனிநாடு ஒன்றையும் இலங்கையில் அமைக்க முடியாது. எனவே, டெசோ மாநாட்டை கருணாநிதி வெற்றிகரமாக நடத்தி முடித்தாலும்கூட, அவரால் தமிழீழத்தை உருவாக்கி விட முடியாது.

அதற்கு மத்திய அரசு அனுமதிக்கப் போவதில்லை. இவையெல்லாம் கருணாநிதிக்குத் தெரி



யாத விடயங்களல்ல. ஆனாலும், அவர் தமிழீழத்தை அமைக்க கனவு காண்பது வேடிக்கையாகிவிடுமா....?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் மக்களிடம்

# மண்டியிடும் சூழல் உருவாகவேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல்வாதிகள் மக்களிடம் மண்டியிடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைப்பதே எமது நோக்கமாகும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொட்டாவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் எல்லா விடயங்களிலும் தலையீடு செய்ய முடியாத வகையில் மக்களை சுரண்டி மக்கள் மீது வரிச் சுமையை சுமத்தி மக்களை துன்புறுத்தி வரும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைப்பதே எனது நோக்கமாகும்.

நான் இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக கடமையாற்றியவன். எனக்கும் மூன்று அறைகளைக் கொண்ட வீடு ஒன்று இருக்கின்றது.

எனினும் அண்மையில் நான் கடுவெல பிரதேசத்திற்கு சென்ற போது ஓர் வீடு நிர்மாணிக்கப்பட்டு வருவதனை பார்த்தேன்.

சாதாரணமாக வீட்டின் மதில் ஆறு அடி இருக்கும். எனினும் இந்த வீட்டின் மதில் குறைந்த பட்சம்.14 அடி இருக்கும்.

உழைக்கும் மக்களுக்காக கடந்த காலங்களில் குரல் கொடுத்த சமத்துவம் பேசும் கட்சியொன்றின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போது ஆளும் கட்சி அமைச்சருமான ஒருவரின் வீடே இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கொள்கை அடிப்படையில் நான் குறிப்பிட்ட நபரின் பெயரை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

இந்த நபருக்கு இரண்டு தொலைபேசிகளைக் கொண்ட ஓர் சிறிய தொலைத் தொடர்பகம் ஒன்று மட்டுமே வாழ்வாதாரத்திற்கு இருந்தது.

எனினும் தற்போது அவர் நிர்மாணித்து வரும் வீட்டின் நாலா பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கூடாரங்களின் அளவு நான் தற்போது வசித்து வரும் வீட்டின் அளவை ஒத்ததாகும்.

இவ்வாறு ஆளும் கட்சி உறுப்பினர்களால் செல்வம் சம்பாதிக்க முடியுமாயின் அவர்கள் எவ்வாறு ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்குமாறு மக்களிடம் கோர முடியும் என்றார். (அ-2)

# 79200 பேருக்கு உதவிப்பணம்

## சமூகசேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

நாடு முழுவதிலுமுள்ள சிரேஷ்ட பிரஜைகள் 79 ஆயிரத்து 200 பேருக்கு உதவிப் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக சமூகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலக மட்டத்தில் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் 34 பேர்வீதம் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு நிதியுதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூகசேவைகள் அமைச்சர் மேலும் தெரிவித்தார். சாந்த பண்டார எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்த 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையின்படி 70 வயதைத்தாண்டிய சிரேஷ்ட பிரஜைகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவிப்பணம் வழங்குவதற்கு சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்தமை மற்றும் வயது முதிர்ந்தவர் அவர்களது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு இவ்வாறான பல சலுகைகளை மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றமை பாராட்டத்தக்கது என்றார். (அ-2)


அம்மா பகவான் சரணம்



இந்தியா, வரதபாளையத்தில் அமைந்துள்ள கல்கி பகவானின் ஆலயத்தில் இலங்கை மக்களுக்கான பகவானின் முக்தி தீக்ஷையும் தரிசனமும்

மகா தீக்ஷை வகுப்பு:-12-17.08-2012

இளைஞர்களுக்கான ஆன்மீக வகுப்பு:-12-16 -08.2012

முக்தி தீக்ஷையும் இலவச தரிசனமும்:-18-08-2012 சனிக்கிழமை

மேற்படி தீக்ஷை மூலம் மக்கள் துன்பத்திலிருந்து விடுதலை பெற கர்ம விமோசனம் பெற்று சம்பூர்ண ஜீவன் முக்தி பெறுவதற்கு வழி வகுக்கும் ஆர்வமுள்ள பக்தர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்:-021 222 2314, 0776153842, 0212225868



அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம், யாழ்.மாவட்டம்.

(062)


# ஒயில் ஊற்றும் கலாசாரத்தை மக்கள் முன்னணி கண்டிக்கிறது

(கொழும்பு)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களின் வீடுகளுக்கு கறுப்பு ஒயில் ஊற்றி அச்சுறுத்தி இருப்பதை ஜனநாயக மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக் கின்றது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் கறுப்பு ஒயில் ஊற்றும் கலாசாரத்துக்கும் அரசியல் கட்சிக்கும் தொடர்பில்லை எனத் தாம் நம்புவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் எனக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களுடன் நல்லிணக்கம் ஏற்படக் கூடாது என்பதை அரச இயந்திரத்தின் ஒரு சாராரே இதைத் திட்டமிட்டு செய்கிறார்களோ என அஞ்சவேண்டியுள்ளது.

இந்தத் தாக்குதலின் ஒருமைப்பாட்டை அரசும் பொலிஸாரும் புரிந்துகொள்ள வேண் டும். தமிழ்மக்களுக்கு இது நன்கே புரிந்துள்ளது.

தமிழ்மக்களுடன் நல்லிணக்கம் ஏற்படக் கூடாது என்பதை அரச இயந்திரத்தின் ஒரு சாராரே இதைத்திட்டமிட்டுச் செய்கிறார்களோ என்பதை அரசாங்கம் விசாரிக்க உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்காது போனால் அரசும் இதற்கு உடந்தை என்றே கருதவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பீர்பால் கதைகள்

## திருடனைப்பிடிக்க இனியவழி



ஒரு வயதான வீரன் ஆக்ராவில் தன்னுடைய நான்கு மகன்களோடு வாழ்ந்து வந்தான். அவன் அக்பரின் படையில் பணி புரிந்து தற்போது ஓய்வு பெற்றிருந்தான்.

ஒருநாள் அந்த வயதான மனிதன் மிகவும் நோய்வாய்ப்பட்டான். தன்னுடைய காலம் சிறிது நாட்களில் முடியப் போகிறது என்பதை உணர்ந்தான். தனது மகன்களை தன் அருகே அழைத்தான்.

நான் 1000 தங்க நாணயங்கள் சேமித்து வைத்துள்ளேன். அதனை நம் தோட்டத்திலுள்ள ரோஜாச்செடிக்கு அடியில் பத்திரமாக புதைத்து வைத்துள்ளேன். நீங்கள் நால்வரும் அந்தப் பணத்தை சரிசமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை உள்ளது. நீங்கள் அப்பணத்தை ஒரு வருடம் கழித்தே எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த 12 மாதங்களில் நீங்கள் ஒவ்வொருவரும் வாழ்வதற்காக உழைத்துப் பணத்தின் அருமையைத் தெரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். இப்பணம் உங்களிடம் எளிதாக வந்தடைந்தால் நீங்களும் எளிதில் செலவழித்து விடுவீர்கள்! என அவன் கூறினான்.

அந்த நால்வரும் தங்களின் தந்தை போலவே செய்வதாக வாக்களித்தனர். தந்தை இறந்த பின், நால்வரும் வேலைக்குச் செல்லத் தொடங்கினர்.

நாம் அனைவரும் ஒருவருடம் கழித்துச் சந்திப்போம். அப்போது நமது தந்தையின் சொத்தைப் பிரித்துக் கொள்வோம்! என அவர்களுள் ஒருவன் கூறினான்.

முதல் மகன் ஒரு பணக்கார வணிகனிடம் சேர்ந்தான். அவன் கடுமையாக உழைத்து வணிகத்தின் அனைத்து முறைகளையும் கற்றுக் கொண்டான். தனது எஜமானின் நம்பிக்கைக்கு உரியவனாகத் திகழ்ந்ததால் உயர்ந்த நிலையை அடைந்தான். அவன் தனது சொந்த வணிகத்தை தொடங்குமளவு செல்வந்தனானான்.

இரண்டாவது மகன் பக்கத்து நாட்டிற்குச் சென்றான். அங்கு இராணுவப் படையில் சேர்ந்தான். அவன் போர்க் கருவிகளைக் கையாளும் திறனைக் கண்டு அவனுக்கு இராணுவத்தில் உயர் பதவி கிடைத்தது. அவனும் நல்ல செல்வந்தன் ஆனான்.

மூன்றாவது மகன் ஒரு புகழ்பெற்ற வைத்தியரிடம் பணி புரிந்தான். அவன் மூலிகை வைத்தியம் பற்றி நன்கு கற்றுத் தேர்ந்தான். பின்னர் தனியாக தனது சிகிச்சையை ஆரம்பித்து மிகவும் புகழடைந்தான். இவனும் நன்கு பொருளீட்டி செல்வந்தனானான்.

பனாரசில் நான் ஓராண்டு வசித்ததால் நகைகள் வணிகம் பற்றி நன்கு கற்றறிந்து வந்துள்ளேன். அதனால் நான் நிறைய பணம் சேர்த்துள்ளேன்! என நான்காவது மகன் அவர்கள் நால்வரும் ஒரு வருடம் கழித்து சந்தித்துக் கொண்ட பொழுது கூறினான்.

சகோதரர்களே! நமது தந்தையின் விருப்பப்படி நாம் நால்வரும் ஒரு வருடம் கடுமையாக உழைத்து பணத்தின் அருமையைத் தெரிந்து கொண்டோம். இப்போது நாம் நமது தந்தையின் சொத்தைப் பிரித்து எடுத்துக் கொள்ளலாம்! என மூத்த மகன் கூறினான்.

அந் நால்வரும் தோட்டத்திற்குச் சென்று தந்தை சொன்ன ரோஜாச் செடியைப் பார்த்தனர். மூத்த சகோதரன் ஒரு மண்வெட்டியை எடுத்துத் தோண்ட ஆரம்பித்தான்.



அண்ணா! நான் இவ் வேலையைச் செய்கிறேன். நம்முள் இளையவனான நானே இவ்வேலையைச் செய்வேன். இவ்வாறு கடைசி சகோதரன் கூறினான். அவனது மண்வெட்டி எதனையோ மோத அவன் மண் தோண்டுவதை நிறுத்தினான்.

இப்போது என் கைகளால் மண்ணை தோண்டினால் நல்லது. இவ்வாறு நினைத்து அவன் மண்ணைத் தள்ளினான். ஒரு சிறிய உலோகப் பெட்டியை எடுத்தான்.

மூத்த சகோதரன் அதனைத் திறந்தான். அந்நான்கு சகோதரர்களும் தங்கக் காசுகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

அப்போது - மூத்த சகோதரன் சற்றுப் பொறுங்கள்! இதில் 1000 நாணயங்களுக்கும் குறைவாக இருப்பது போல் தோன்றுகிறது! எனச் சொன்னான்.

நால்வரும் கவனமாகக் காசுகளை எண்ணினர். இதில் 750 தங்க நாணயங்களே உள்ளன. நமது தந்தை ஏதேனும் தவறு செய்துள்ளாரோ? என்று இரண்டாம் மகன் கூறினான்.

அவருடைய குறைவான கண் பார்வை இதற்குக் காரணமாக இருந்திருக்குமோ! என்று மூன்றாவது மகன் ஆமோதித்தான்.

இல்லை இல்லை நம் தந்தை ஒரு சிப்பாய். அவர் மிகக் கவனமாகச் சேமித்தார் என மூத்த மகன் கூறினான்.

250 தங்க நாணயங்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெளிவாகப் புரிகிறது. 1000 தங்க நாணயங்களை நாம் நால்வரும் பிரித்துக் கொண்டால் ஆளுக்கு 250 தங்க நாணயங்கள் கிடைக்கும். ஆனால், இப்போது 750 தங்க நாணயங்களே உள்ளன. அத்திருடன் தனக்குக் கூடுதல் பங்கு கிடைக்கும் என எண்ணியிருக்கக் கூடும். இதனால் நம் நால்வரில் ஒருவ னே திருடன் என்பது தெரிகிறது. அல்லது நம் தந்தை தவறு செய்திருக்கக் கூடும். இவ்வாறு இரண்டாவது சகோதரன் கூறினான்.

ஆனால், ஒருவரும் உண்மையைக் கூறவில்லை.

நாம் பீர்பாலிடம் செல்வோம். அவருக்கு நம் தந்தையைத் தெரியுமாதலால் நமக்கு உதவுவார் என மூத்த சகோதரன் தெரிவித்தான்.

அவர்கள் பீர்பாலின் இல்லம் சென்று அவரைக் கண்டதில் மகிழ்ச்சியுற்றனர். பீர்பால் அவர்களின் கதையைச் சுவாரசியமாகக் கேட்டார்.

உங்களின் தந்தை மிகவும் எச்சரிக்கையான மனிதர். அவர் 1000 தங்க நாணயங்களில் எந்தவொரு தவறும் செய்திருக்கமாட்டார். நீங்கள் கூறியது போல் உங்களில் ஒருவனே திருடனாவான். சிந்திக்க எனக்கு சிறிது நேரம் தேவை. நீங்கள் வெளியே தோட்டத்தில் காத்திருக்கவும் என்று பீர்பால் கூறினார்.

அவர் நான்கு சகோதரர்களையும் ஒரு மணி நேரம் கழித்து அழைத்தார். நான் சில நல்ல இனிப்புகள் உண்ண விரும்புகிறேன். எனக்காக நீங்கள் வாங்கி வர முடியுமா? உங்களுக்கு ஆக்ரா நகரில் எது நல்ல இனிப்புக் கடை என்பது நன்கு தெரியும் என நினைக்கிறேன்! என்று கூறினார்.

இல்லை நாங்கள் பிழைப்பிற்காக ஒரு வருடம் வெளியூர் சென்றிருந்தோம். மேலும் எங்களது வீடு ஆக்ராவுக்கு வெளியே உள்ளது. இந்த ஒரு வருட காலத்திற்குள் பல கடைகள் வந்திருக்கக் கூடும். அதனால் நாங்கள் எது நல்ல இனிப்பு கடை என்பதைத் தேட வேண்டும்! என மூத்த சகோதரன் கூறினான்.

அப்படியென்றால் உங்களுள் யாருமே ஆக்ரா நகரில் ஒரு வருடமாக இல்லை! சரி ஒரு நிபந்தனை விதிக்கிறேன். நீங்கள் வாங்கி வரும் இனிப்பு உயர்ந்த தரமுடையதாகவும் நீங்கள் கடந்த 12 மாதங்களில் சுவைக்காததாகவும் இருக்க வேண்டும்! என பீர்பால் குறிப்பிட்டார்.

நான்கு சகோதரர்களும் நல்ல கடையைத் தேடிச் சென்றனர். அவர்கள் பீர்பாலின் நிபந்தனையை நினைவில்



வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

முதலாவதாக மூத்த சகோதரன் இனிப்புகளோடு வந்தான். பின்னர் ஏனைய இருவரும் இனிப்புகளோடு வந்து சேர்ந்தனர். வெகுநேரம் கடந்தது. ஆனால் கடைசி சகோதரனைக் காணவில்லை. கடைசியாக வெகுநேரம் சென்று மாலையில் அவன் வந்து சேர்ந்தான்.

நீ ஆக்ராவிலிருந்து வெளியே சென்று இனிப்புக்களை வாங்கி வந்தாயா? என்று பீர்பால் கேட்டார்.

இல்லை நான் இந்த ஓராண்டாக சுவைக்காத நல்ல இனிப்புக்களை வாங்க தேடி அலைய வேண்டியிருந்தது.

பீர்பால் ஒவ்வொருவரும் வாங்கி வந்திருந்த இனிப்புக்களை சுவைத்துப் பார்த்தார்.

உங்களுள் திருடன் கடைசி சகோதரன் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் அவன் வாங்கி வந்த இனிப்புகள் ஏனைய மூவரும் வாங்கி வந்த இனிப்புகளை விட தரம் குறைவாக உள்ளது. ஆக்ரா நகரை விட்டு வெளியே எங்கும் செல்லாததால் அவன் இங்குள்ள அனைத்து இனிப்புகளையும் சுவைத்துள்ளான்.

பனாரஸ் சென்று அவன் எந்தவொரு வணிகமும் கற்கவில்லை. தனது தந்தையின் சேமிப்பில் இருந்து 250 தங்க நாணயங்களை எடுத்து வீட்டிலேயே தங்கியிருந்தான். அதனால் அவன் இதுவரை சுவைக்காத இந்த தரக்குறைவான இனிப்புகளைத் தேடி அலைய வேண்டியதாயிருந்தது. இவன் தண்டிக்கப்பட வேண்டியவன். இவ்வாறு பீர்பால் விளக்கினார்.

கடைசி சகோதரன் தானே திருடன் என ஒப்புக் கொண்டான். ஏனைய சகோதரர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த பீர்பாலின் அறிவுத் திறனைப் புகழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுத்திட்ட யோசனையின் போது தமிழ் மக்களை பிழையாக வழிநடத்தக்கூடாது

## ஸ்ரீரங்கா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் தலைவர்கள் சுயலாப நோக்கில் செயற்பட்டு வருவதாகவும் மக்களை பிழையாக வழிநடத்தி சுயலாப நோக்கில் செயற்பட்டு வருவதாகவும் பிரஜைகள் முன்னணியின் பொதுச் செயலாளரும் எம்.பி யுமான கே.ஸ்ரீரங்கா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் யதார்த்தமாக செயற்படுவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவமான அரசாங்க ஆதரவு கொள்கைகளை பின்பற்றுவதுடன் அரச அனுசரணையுடன் அதன் தலைமை செயற்பட்டு வருகிறது.

எனது அரசியல் வளர்ச்சி தொடர்பில் அச்சம் கொண்ட நபர்கள் நான் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருவதாகவும் பிரசாரம் செய்கின்றனர்.

நான் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவில்லை. 18 ஆம் திருத்தச்சட்ட மூலத்திற்கு மட்டுமே ஆதரவளித்தேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவான ஊடகங்கள் இவ்வாறு தம்மை அரச ஆதரவாளராக பிரசாரம் செய்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள், மலையகத்தில் வாழும் மக்கள் என தாம் பேதம் காட்டப்போவதில்லை. இந்தியத் தமிழர், இலங்கைத்தமிழர் என்ற கோட்பாட்டில் தமக்கு உடன்பாடில்லை. வட்டுக்கோட்டை பிரகடனத்தின் ஊடாக ஈழக் கோரிக்கை முன்வைத்த சம்பந்தன் அமிர்தலிங்கம் உள்ளிட்ட 18 பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் எவரும் ஆயுத போராட்டத்திலோ அல்லது வேறும் போராட்டங்களிலோ பங்கேற்கவில்லை.

அரசியல் தீர்வுத் திட்ட யோசனைகளின் போது தமிழ் மக்கள் பிழையாக வழிநடத்தப்படக் கூடாது என்பதே தமது நோக்கம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டதன் பின்னர் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைய வேண்டும்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் போன்ற ஆளும் கட்சி அரசியல்வாதிகள் தாம் வன்னியில் அரசியல் நடத்துவதனை விரும்பவில்லை. அரசாங்கத்தின் சிலரின் நடவடிக்கைகளே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி வருகிறது.

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல அபிவிருத்தி திட்டங்களிலும் அரசியல்வாதிகள் தொடர்பு பட்டிருப்பதாகவும் ஏனையவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மு.கா.எங்களுக்கு எதிராளிக்கட்சியல்ல; புரிந்துணர்வுடன் செயற்படுகிறோம்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடவுள்ளமை அரசாங்கத்துடன் புரிந்துணர்வு அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானமாகுமென அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார்.

மு.கா. எங்களது எதிராளிக் கட்சியல்ல எனக்கூறிய அமைச்சர் பலதரப்பு சுற்றுப் பேச்சுவார்த்தைகளையடுத்து புரிந்துணர்வின் அடிப்படையிலேயே எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இரு கட்சிகளிடையிலும் சிறந்த புரிந்துணர்வு உள்ள நிலையில் இத்திர்மானம் எடுக்கப்பட்டதுள்ளதேயன்றி கட்சிகளுக்கு இடையிலான உட்பூசல்கள் எதுவும் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார். இது ஒரு பெரிதாக தூக்கப் பிடிக்கும் விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியை பெற்றுக்கொள்ளவில்லை. கிழக்கு மாகாணத்தில் தனித்து போட்டியிடுவது என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தனிப்பட்ட தீர்மானம்.

இந்தத் தீர்மானம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளது என்றார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடுவதாக அறிவித்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இறுதி நேரத்தில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கோப்பாய் வைத்தியசாலையில் நீரிழிவு நோயாளர்கள் அவலம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் நீரிழிவு நோயாளிகளின் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை சோதனை செய்து கண்டறிவதற்கு போதிய வசதிகள் இல்லாமையினால் நோயாளர்கள் அவல நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலமையினால் நீரிழிவு நோயாளர்கள் மட்டுமன்றி ஏனைய நோயாளர்களும் பாதிக்கப்படுவதாக மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி டாக்டர் ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மாகாண பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு ஏற்கனவே தகவல் கொடுத்தும் உரிய நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வைத்தியசாலையில் வாரத்தில் ஒருநாள் நடைபெற்று வருகின்ற நடமாடும் ஆய்வுகூட பரிசோதனையும் ஒழுங்கு முறையில் நடைபெறுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, உரிய அதிகாரிகள் விரைவாக அக்கறை செலுத்தி நோயாளர்களின் நலனை மேம்படுத்துவதற்கு உதவுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேகத்துடன் வரலக்ஷ்மி நோன்புப் பூசைகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து முற்பகல் 9 மணிக்கு பக்தர்களுக்கு நோன்புக் காப்பு வழங்குதல் நடைபெறும் என ஆலய பூசகர் அறிவித்துள்ளார். (அ-9)


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும்
அகில இலங்கை சைவ மாநாடு -2012

நாள்:- நந்தன வருஷம் ஆடி மாதம் 5 ஆம், 6ஆம், 7ஆம்
நாள் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 20, 21, 22
வெள்ளி, சனி, ஞாயிறு
இடம்:- சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.

மாநாட்டுப் பெருந்தலைவர்
பேராசிரியர், முனைவர் வை. இரத்தினசபாபதி
(சென்னை)

நாளைய நிகழ்வுகள் (காலை)
(ஆடி மாதம் 06 ஆம் நாள் 2012.07.21 சனிக்கிழமை)

தலைமை
திருமதி.மனோன்மணி சண்முகதாஸ்
(வருகை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

காலை 9.00 மணி:- மங்கல விளக்கேற்றல்
காலை 9.10 மணி:- திருமுறை ஓதல்
செல்வி.கஜப்பிரியா புவிராஜசிங்கம்
(அகில இலங்கைத் திருமுறைமன்றம்)
காலை 9.15 மணி:- வரவேற்புரை
த.சிறிகாந்தன்
(மேலதிக உதவிச்செயலாளர், சைவபரிபாலன சபை)
காலை 9.30 மணி:- தலைமையுரை
காலை 10.00 மணி:- உரை அரங்கம்
1. "சம்பந்தர் பாடல்கள் காட்டும் தலைமைத்துவ பண்புகள்"
திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன்
(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகதுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
2. "சம்பந்தர் தேவாரப் பாடல்களில் தாய்மைப் பண்பு"
கலாநிதி ஆர்.ஜெயலக்சுமி
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
3. "சம்பந்தர் பாடல்களில் பக்திரசம்"
பேராசிரியர் A.N.கிருஸ்ணவேணி
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
காலை 11.30 மணி:- சிறப்புரை
"கவுணியன் கட்டுரை"
பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி
(மாநாட்டு பெருந்தலைவர்)
பகல் 12.30 மணி:- தேவாரம்

(மாலை)
தலைமை
சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை
(உப தலைவர், சைவபரிபாலன சபை)
மாலை 4.00 மணி:- தேவாரம்
மாலை 4.10 மணி:- தலைமையுரை
மாலை 4.30 மணி:- உரை அரங்கம்
1. "சம்பந்தர் பாடல்கள் புலப்படுத்தும் சமுதாய சீர்திருத்த சிந்தனைகள்"
திரு.சின்னராசா ரமணராஜா
(உதவி விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
2. "சம்பந்தர் பாடல்களில் அறிவாராய்ச்சி அடிப்படைகள்"
திரு.திருச்செல்வம் செல்வமனோகரன்
(உதவி விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
மாலை 5.30 மணி:- சிறப்புரை
1. "திருநெறிய தமிழ்" (சிவத்தமிழ் செல்வர் ச.விநாயகமூர்த்தி)
மாலை 6.30 மணி:- 2. "பெருமணம்"
பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி
(மாநாட்டு பெருந்தலைவர்)
மாலை 7.20 மணி:- நன்றியுரை திரு.இ.தவகோபால் (பொருளாளர் சைவ பரிபாலன சபை)
மாலை 7.25 மணி:- தேவாரம்
மாலை 7.30 மணி:- சங்கீத கதாப்பிரசங்கம்
"இன்னிசையாள் தமிழ் பரப்பும் திருஞான சம்பந்தர்"
திரு. ஏரம்பமூர்த்தி அனுசாந்தன்
(திருவாவடுதுறை ஆதீனப் புலவர்)

சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவ நெறிப்புரவலர் த.சண்முகலிங்கம் தலைவர்
தி.மாணிக்கவாசகர் செயலாளர்
மு.திருஞானசம்பந்தபிள்ளை சமயபிரசார அமைச்சர்

66, கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (ஐ)
சைவ பரிபாலன சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய Office பதிப்பை வெளியிட்டது microsoft




உலகின் பிரபல கணனி நிறுவனமான மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது பிரபல தயாரிப்புகளில் ஒன்றான மைக்ரோசொப்ட் ஒஃபிஸ் இற்கான புதிய பதிப்பின் பிறீவியூ பதிப்பு என அழைக்கப்படும் முன்தோற்றப் பதிப்பை வெளியிட்டுள்ளது. இதன் இறுதிநிலைப் பதிப்பு அடுத்தாண்டே வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய பதிப்பு மைக்ரோசொப்ட் ஒஃபிஸ் 2013 என அழைக்கப்படவுள்ளது. இதன் வெளியீட்டின் போது கருத்துத் தெரிவித்த மைக்ரோசொப்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவ் போல்மர் இந்தப் புதிய பதிப்பு மைக்ரோசொப்டின் அதிக எதிர்பார்ப்புக்களைக் கொண்ட வெளியீடு எனத் தெரிவித்தார்.தற்போதைய நிலையில் விண்டோஸ் 7, விண்டோஸ் 8 இல் இயங்கும் கணனிகளிலும் டப்லட்களுக்காகவும் வெளியிடப்பட்டுள்ள இதன் பதிப்பு அடுத்தாண்டு இறுதிநிலைப் பதிப்பாக வெளியாகும் போது அப்பிள் கணனிகளுக்காகவும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள புதிய பதிப்பில் பல புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் முக்கிய வசதியாக பி.டி.எப்.கோப்புக்களை நேரடியாக மைக்ரோசொப்ட் வேர்ட்டில் திறந்து அவற்றை எடிட் செய்யக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி இதற்கு முன்னர் இருந்தது போன்று பி.டி. எப். கோப்புக்களை முதலில் வேர்ட் கோப் பாக மாற்றி அதன் பின்னர் அவற்றை எடிட் செய்து பின் னர் திரும்பவும் பி.டி.எப். கோப்பாக மாற்றிப் பயன்படுத்த வேண்டிய தேவை தற்போது இல்லாமல் செய் யப்பட்டுள்ளது.

அத்தோடு பி.டி.எப். கோப்புக்களை மைக்ரோ சொப்ட் வேர்ட்டில் எடிட் செய்யும் போது அந்தக் கோப்பின் வடிவங்களில் எந்தவித மாற்றங்களையும் வேர்ட் செய்வதில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

தவிர மைக்ரோசொப்ட் வேர்ட் டைப் பயன்படுத்திக் கொண்டி ருக்கும் போதே இணையத்தைப் பயன்படுத்தித் தேவையான விட யங்களைப் பார்த்த பின் அவ்விடயங் களை வேர்ட் இல் இணைப்பத ற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

உதாரணமாக வேர்ட் கோப்பு ஒன்றில் வீடியோ ஒன்றை இணைக்க விரும்பினால் இணைய மேய்வானுக்குச் செல்லாமல் வேர்ட்டில் இருந்தே *பிங்* தேடுதற் பொறி ஊடாகத் தேடி அந்த வீடியோக் கோப்பினை இணைக்கக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு புதிய மைக்ரோசொப்ட் ஒஃபிஸ் பதிப்பு இணையத்தோடு அதிகமாகச் சேர்ந்தியங்குவதற்குரிய வசதிகளைக் கொண்டுள்ளது.




ஸ்கை ட்ரைவ் ஃபிளிக்கர் போன்ற கணக்குகளை உங்கள் மைக்ரோசொப்ட் ஒஃபிஸ் பதிப்போடு இலகுவாக இணைத்துப் பயன்படுத்தப் கூடியவாறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


மைக்ரோசொப்ட் வேர்ட் தவிர எக்சல் வன் நோட் பப்ளிஷர் உட்பட அனைத்து ஒஃபிஸ் உள்ளடக்கங்களும் புதுமைப்படுத்தப்பட்டு புதிய வடிவில் காணப்படுவதோடு பயன்படுத்துவதற்கு இலகுவான வழியில் காணப்படுகின்றன.

இந்தப் புதிய பதிப்பு தற்போது முன்தோற்ற அமைப்பில் கிடைப்பதால் இலகுவாகத் தரவிறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இறுதிப் பதிப்பு வெளியாகும் வரை இதை இலகுவாகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. புதிய பதிப்பை இலவசமாகத் தரவிறக்க http://www.mirosoft.com/office/preview/en என்ற முகவரிக்குச் செல்லலாம்.

# ROOM CAMERA பொருத்தப்பட்டிருக்கிறதா?




நம்மையறியாமலேயே நம்மை போட்டோ, வீடியோ எடுத்து மற்றவர் களுடன் இன்டர்நெட்டில் பகிர்ந்து கொள்ளும் கலாசாரம் தற்போது மிக சாதாரணமாக எமது நாட்டிலும் பரவி வருகிறது. இது முழுக்க முழுக்க பெண்களை குறிவைத்தே நடந்து வருகிறது. அப்பாவியான பல பெண்கள் இதற்கு பலியாகி வருகிறார்கள்.



இதனை கண்டறிந்துகொள்ள ஒரு வழி உண்டு. TRAIL ROOM CAMERA இல் இருந்து கொண்டு செல்போன் மூலமாக யாருக்காவது call செய்து பார்க்க வேண்டும். உங்கள் அழைப்பு நீங்கள் அழைத்தவரை சென்றடைந்தால் அந்த அறையில் ரகசிய கமராக்கள் இல்லை. ஒருவேளை உங்கள் அழைப்பு நீங்கள் திரும்பத் திரும்ப அழைத்தும் call செல்லவில்லை என்றால் அங்கு ரகசிய கமரா இருப்பது உறுதி என்று கணனி பொறியியலாளர்கள் கூறுகிறார்கள்.

# கட்டணம் இன்றி இணையத்தளம்





தங்களுக்கென்று தனி இணையத் தளத்தை உருவாக்க விரும்பும் நபர்கள் கட்டணத்தை செலுத்தி இணைய முகவரியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாமலும் இலவசமாக இணையத்தளங்களை உருவாக்கிக் கொள்ளலாம். இதற்கென சில விதிமுறைகளையும் அந் நிறுவனங்கள் விதித்துள்ளன.

இதற்கான இணையத்தள முகவரிகள்
http://www.webs.com/, http://www.webnode.com/




# Hard disk பிரச்சினையா?



ஹார்ட் டிஸ்க் முழுவதும் பைல்கள் பதியப் பட்டு ஏறத்தாழ இடம் இல்லாத நிலை ஏற்பட் டால் கணனியில் எல்லா விதப் பிரச்சினையும் ஏற்படும். ஏன் கணனி இயக்கமே நின்று போகலாம்.

இதற்கான காரணங்களைப் பார்க்கலாம்.

1.டிஸ்க் முழுவதும் பைல்கள்: ஏறத்தாழ முழுமை அடையும் அளவிற்குப் பைல்கள் இருக்கலாம். தேவையற்ற புரோகிராம்கள், பைல்கள் ஆகியவற்றை நீக்க வேண்டும். அடிக்கடி பயன்படுத்தாத பைல்களை இணைத்துப் பயன்படுத்தக் கூடிய போர்ட்டபிள் ஹார்ட் ட்ரைவிற்கு மாற்றி கணனியில் உள்ள ஹார்ட் ட்ரைவை சிறிது சுதந்திரமாக இயக்கவிடலாம்.

2. வைரஸ் இருக்கலாம்: கணனியை பாதிக்கும் வைரஸ் புரோகிராம்கள் இதுபோல செய்தி தரலாம். செய்தியுடன் இந்த இடத்தில் கிளிக் செய்திடுங்கள். கணனி கிளீன் செய்யப்படும் என ஏதேனும் லிங்க் ஒன்றைத் தரலாம். அந்த லிங்க்கில் கிளிக் செய்தால் மேலும் பல வைரஸ்கள் கணனியில் இறங்கலாம்.

3.ஹார்ட் ட்ரைவ்:- சேதமாகிறது: ஹார்ட் ட்ரைவ் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படுவதால் அதன் வாழ்நாள் பயன்பாட்டுத் தன்மை குறையலாம். இறுதியில் இயங்காமல் நின்று விடலாம். தன் செயல் தன்மையை இழக்கும் ஹார்ட் டிஸ்க்குகள் இதுபோல் தவறான செய்தியை அனுப்பலாம். ஹார்ட் டிஸ்க் ஒன்று அதிகபட்சம் ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் மட்டுமே நன்றாகச் செயற்படும். பத்து ஆண்டுகளுக்கு மேல் செயற்படுவது என்பது அதிர்ஷ்டமே. இதனைக் கணக்கிட்டு பாதுகாப்பான நடவடிக்கை எடுப்பதே நல்லது.

# Picasa அல்பம்

picasaWeb Albums என அழைக்கப்படும் இந்த தளம் கூகுள் தன் வாடிக்கையாளர்களுக்குத் தரும் அருமையான பல வசதிகளில் ஒன்றாகும். இதில் பதிந்து வைக்கப்படும் போட்டோக்களை நீங்கள் அனுமதிக்கும் பட்சத்தில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். போட்டோ, எடிட்டிங், அல்பம் அமைத்தல், வீடியோ ஸ்டோரேஜ், போட்டோக்களை நிர்வகிக்க ஒரு டெஸ்க் டாப் அப்ளிகேஷன் ஆகியவை கிடைக்கின்றன. 2,048×2,048 என்ற பிக்ஸெல் அளவிலான டிஜிட்டல் போட்டோ பைல்களை எவ்வளவு வேண்டுமானாலும் இதில் ஸ்டோர் செய்திடலாம். இதற்கு மேலான பிக்ஸெல் எனில், 1 ஜிபி அளவில் மட்டுமே ஸ்டோர் செய்திட முடியும். மேலும் இடம் வேண்டும் எனில் கட்டணம் கட்டிப்பெற வேண்டும். 25 ஜிபிக்ய் 2.5 டொலர் செலுத்த வேண்டும். ஏனைய போட்டோ சேமிப்பு தளங்கள் போல் இல்லாமல் இந்த தளத்தில் பல போமட்டுகளில் உள்ள போட்டோக்களை சேவ் செய்திடலாம். பாதுகாப்பாக இருக்கும் முழு அல்பத்தையும் மீண்டும் உங்கள் கணனிக்கு டவுண்லோட் செய்திட முடியாது.

# Internet Explorer 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மையில் தன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10ன், பிளாட்பார்ம் பிரிவியூவினை வெளியிட்டது. அப்போது மிகத் தெளிவாக இந்த புரோகிராம் விண்டோஸ் 7க்கு முந்தைய ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில் இயங் காது என அறிவித்துள்ளது. எனவே, விஸ்டாவில் பதித்து இயக்க முடியாது. முன்பு விண்டோஸ் எக்ஸ்பியில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9 இயங்காது மைக்ரோசொப்ட் அறிவித்த போது பலத்த எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், மைக்ரோசொப்ட் கணனிப் பயன்பாட்டினை நவீனப்படுத்தியே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக நின்றது. இப்போது அதே நிலையை இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10 க்கும் மேற்கொண்டுள்ளது. இதனால் வாடிக்கையாளர்கள் குரோம் போன்ற பிரவுசர்க ளுக்குத் தாவுவார்களே என்ற நிலைக்கெல்லாம் மைக்ரோசொப்ட் அஞ்சவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் பிடித்தவனுக்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை அதனால் உணரமுடியாது. - ஒகானல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீதித்துறையைக் காப்பாற்றுவது அனைவரதும் தலையாய கடமை

மன்னாரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிமன்றங்களை தாக்கி சேதப்படுத்தியதான செயல் தாளா வேதனை தருவதாகும்.

இலங்கையின் வரலாற்றில் நீதிமன்றத்தை தாக்கும் அநாகரிகச் செயல்கள் முன்னர் நடந்த தான பதிவுகள் அருந்தலாக இருக்கின்றபோது,

மன்னாரில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் நீதிமன்றத்தை தாக்கியிருப்பது இந்த நாட்டில் நீதித்துறைக்கு இருக்கக் கூடிய ஆபத்தின் வெளிப்பாடு எனலாம்.

அரசு முதல் சாதாரண பிரஜைகள்வரை தமக்கான நீதியை-உரிமையை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரேஒரு இடமாக நீதிமன்றங்களையே நம்பியிருக்கின்றனர்.

இந் நிலையில் நீதித்துறைக்கு எச்சரிக்கை செய்யும் வகையில், மன்னாரில் நீதிமன்றம் தாக்கப்பட்ட செயல் எக்காரணம் கொண்டும் ஜீரணிக்கக் கூடியதோ அன்றி சமாளிக்கக் கூடியதோ அல்ல.

உண்மையில் மன்னாரில் நீதிமன்றங்களைத் தாக்கி சேதப்படுத்தியவர்களே படு பயங்கரவாதிகள் ஆவர்.

எத்தனையோ நாடுகளில் உரிமைப் போராட்டங்களும் அது தொடர்பான கிளர்ச்சிகளும் நடந்துள்ளன-நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் அங்கெல்லாம் நீதிமன்றங்கள் தாக்கப்பட்டதான பதிவுகள் மிகவும் குறைவு. ஆனால் மன்னாரில் ஒரு குறிப்பிட்ட தரப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தி நீதிமன்றத்தை தாக்கியுள்ளனரெனில், அவர்களிடம் இருக்கக் கூடிய பின்புல சக்தி எத்துணை பலமானதென்பதை புரிந்துகொள்வதில் இடர்பாடுகள் இருக்க முடியாது.

நீதிமன்றத்தையே தாக்குகின்றவர்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் இருக்கக்கூடிய ஏனைய இன மக்களின் பாதுகாப்பு குறித்தும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக் குறித்தும் கவனம் கொள்ளாதிருப்பது மிகவும் பயங்கரமான விளைவுகள் ஏற்பட வழிவகுத்துவிடும்.

எனவே மன்னாரில் நீதிமன்றங்களைத் தாக்கிய செயலை மிக உச்சமான பயங்கரவாதச் செயலாக இலங்கை அரசு கருதி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தவிர நீதித்துறையை பாதுகாக்க இந்த நாட்டின் அனைத்துப் பொதுமக்கள் உட்பட சட்டத்துறை சார்ந்தவர்கள் அனைவரும் கடமையாகப் பாடுபட வேண்டும்.

இது விடயத்தில் சட்டத்தரணிகள் ஒற்றுமையோடு செயற்படத்தவறினால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும்.

# புதுக்குடியிருப்பு மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

## மக்கள் விசனம்

(ஆனையிறவு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பரந்தன் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்பு வரை வழங்கப்பட்ட மின்சாரம் பெரும்பாலான மக்களுக்கு வழங்கப்படாமையால் அம்மக்கள் தாம் இருளிலேயே வாழ்ந்து வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்குவதற்காக பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு வரை உள்ள இடங்களுக்கு மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் துரிதகதியில் இடம்பெற்ற போதிலும் இரண்டு வீதமான மக்களுக்கே இம்மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

நவீனமயமாக்கப்பட்ட இவ்வுலகில் அனைத்து வேலைகளும் மின்சாரத்தின் ஊடாகவே பூரணப்படுத்தப்படுகிறது.

இவ்வேளையில் மின்சாரம் இல்லாது இம்மக்கள் இருள் சூழ்ந்த வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு சிலருக்கு மின்சாரம் வழங்கி ஏனையோருக்கு மின்சாரம் வழங்கப்படாதுவிட்டமை புறக்கணித்த செயற்பாடாகும் என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தம் வர்த்தகர்களுக்கு மட்டுமா வீசும். மக்களுக்கு இல்லையா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மின்சாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் வேலைகள் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் ஆகியோரின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் அறிவித்த போது அலட்சியமான பதிலையே இதுவரையிலும் கேட்க வேண்டியுள்ளது.

எனவே இவ்விடயத்தில் உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து மின்சாரத்தை வழங்கி மக்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

## இலவச கருத்தரங்கு

கொழும்பு அருள் கல்வி வட்டத்தினால் நடத்தப்படும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கிளிநொச்சியிலும் நடைபெறவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை பெண் மாணாக்கர்களுக்கான கருத்தரங்கும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஆண் மாணவர்களுக்கு மட்டுமான கருத்தரங்கும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இருபாலாருக்குமான கருத்தரங்கு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை இருபாலாருக்குமான கருத்தரங்கும் 17ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியிலிருந்து 5.30 மணிவரை கிளிநொச்சியில் இருபாலாருக்குமான கருத்தரங்கும் நடைபெறும். இக்கருத்தரங்கில் இலவசமாக வினாவிடைப்புத்தகங்களும் அனைத்துப் பாடங்களுக்குமான மாதிரி வினாக் கொத்துக்களும் வழங்கப்படும். (அ-9)

# இலவசக் கல்வி முறைமையை அரசாங்கம் சீர்குலைத்துள்ளது

## கபீர் ஹாசீம் எம்.பி. தெரிவிப்பு

இலவசக் கல்வி முறைமையை அரசாங்கம் சீர்குலைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விவசாயியின் பிள்ளைகளும் தொழிலாளியின் கல்வி பயிலும் சந்தர்ப்பத்தை அரசாங்கம் முடக்கியுள்ளது.

சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் அறிமுகம் செய்யப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மிகச் சிறந்த முறையில் முன் னெடுத்தார்.

1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டது முதல் இலவசக் கல்வி முறைமை சீர்குலைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய அரசியல் கட்சிகளும் இலவசக் கல்வி முறைமையை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (அ-2)




சைவ வழிபாட்டு நடைமுறைகளில் திருநீறு அணிதல் ஒரு சிறப்பான முறையாகும். திருநீற்றுப் பதிகம் எனச் சிறப்பான பதிகம் ஒன்றை ஞானசம்பந்தர் பாடியுள்ளார். திருநீறு தரித்தவர்களைக் காண்பதே ஒரு இனிய காட்சியாகும். அது ஒரு புதிய கவினைத் தரும். இயற்கையான அழகோடு இன்னொரு பொலிவையும் தரும். திருக்கோயில்களிலே திருநீற்றைப் பெறும்போது ஒரு புதிய ஆற்றல் எமக்குக் கிடைக்கிறது. அர்ச்சகர் மந்திரமாவது நீறு-எனக்கூறி எம்முடைய நெற்றிப் பொட்டிலே விபூதியைப் பூசிவி டும் போது எம்முடல் இறைவன் திருவருளால் இன்பம் அடைகிறது. நோயுற்றவர்களுக்குத் திருநீறு அருமருந்து. பிணியுற்றோருக்கு நலம் தரும் நல்லருள். இந்த உண்மையை உலகம் அறிய வைத்தவர் சம்பந்தர். நாவுக்கரசரைத் சூலை நோயிலிருந்து காப்பாற்றியதும் திருநீறேயாகும். திருநீறு விடுபேற்றிற்கு அறிகுறி. விபூதி என்பதன் பொருளுமதுவே.

மணிவாசகர் இறைவனால் திருநீறு பூசப்பட்ட பேறுபெற்ற அடியவர். குருந்தரமர நிழலிலே குருவாக எழுந்தருளிய இறைவன் அவருடைய நெற்றியிலே திருநீற்றைத் தன் திருக்கரத்தால் பூசிவிட்டான். அதனைத் திருநீறே பூசப்பட்டேன் என மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். ஞானாசாரிய னாக வந்த நின்னால பேரின்பப் பேற்றி ற்கு அறிகுறியாகிய தி ரு வெ ண் ணீ பூசப்பட்டேன். ஆனால் இப்போது பூமியிலுள்ளவர்களால்ஏசப்பட்டேன். அமைச்சருக்குரிய கடமைகளை விடுத்து நான் உன்னைக் காண்பதற்காக வழிபாடு செய்வதை இந்த உலகத்தார் உணரவில்லை. அதனால் உனக்கு ஆட்பட்டவனாகிய நான் வீட்டின்பப் பேற்றையடையவே ஆசைப்படுகிறேன் என மணிவாசகர் தன்னுடைய நிலையைப் பாடலிலே பதிவு செய்துள்ளார். இப்பதிவு இன்று எம்மையும் இறையருள் பற்றி எண்ணத்தூண்டுகிறது.

உலக வாழ்க்கையூடே இறைவன் பற்றிய சிந்தனை எழுவது கடினம். ஆனால் திருக்கோயில் வழிபாட்டால் இறைவன் பற்றிய சிந்தனையை எம்முள்ளத்திலே வளர்த்துக்கொள்ளலாம். மற்றவர்கள் எம்மைப் பார்த்து எள்ளி நகையாடுவார்களே என்று நாம் கவலைப்படவேண்டியதில்லை. சுண்ண வெண்ணீறணிந்தால் தூநெறி சேரலாம். முதன் மந்திரிப் பதவியைக் கைவிட்டு விட்டுச் சிவனுக்கு அடியவனாகி அலைந்து திரியும் மணிவாசகரை அறிவிலி என்றே எல்லோரும் சொன்னார்கள். அவர் பெற்ற இறையனுபவம் அவர்கள் அறியாதது. பொருள் தேட்டத்திற்கான பதவிநிலையால் எல்லா விதமான இன்பங்களையும் பெறலாம் என்பதே அவர்களுடைய எண்ணமாகவுள்ளது. ஒருவரை ஏசும்போது அவருடைய செயற்பாடுகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் ஏசுவதும் உண்டு. மணிவாசகர் நிலையும் இவ்வாறாகத் தான் இருந்தது. அவர் ஒரு காலத்தில் மந்திரிப்பதவியாலும் தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பட்டத்தாலும் எல்லா இன்பங்களையும் பெறலாமென எண்ணியிருந்தார். ஆனால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர்தான் உண்மையான நிலையான இன்பத்தை

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்


யுணர்ந்து கொண்டார்.

அந்த அனுபவத்தை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளப்ப பல பாடல்கள் பாடினார். அதற்குரிய எளிதான வழியையும் எடுத்துரைத்துள்ளார். திருக்கோயிலுக்குச் சென்று திருநீற்றைப் பூசும்பேறு பெற்றாலே போதும். இந்தப் பக்திநெறி இன்றுவரை ஒரு நம்பிக்கை நெறியாக எம்மிடையே இருக்கின்றது. இந்நிலை எல்லோராலும் தொடரப்பட வேண்டும்.

**பேசப்பட்டேன் நின்னடியாரில்**
**திருநீறே பூசப்பட்டேன் பூதலரால்**
**உன்னடியானென்று**
**ஏசப்பட்டேன் இனிப்**
**படுகின்ற தமையாதால்**
**ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன்**
**உன் அடியேனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ்கல்லூரி B அணிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக் கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 179 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபையினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென் ஜேன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி B அணியினரும் யாழ்ப்பரணம் மத்திய கல்லூரி அணியினரும் மோதிக் கொண்டனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட் டினையும் இழந்து 286 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டது.

மத்திய கல்லூரி அணி சார்பாக அதிக பட்சமாக அலன் டிலன் 73 ஓட்டத்தினையும் ஒனேசியஸ் 58 ஓட்டத்தினையும் நிதூசன் 29 ஓட்டத்தினையும் சஞ்சயன் 28 ஓட்டத்தினையும் ஜஸ்ரின் கனிஸ்ரன் 22 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

சென் ஜோன்ஸ் கல்லூரி B அணி சார்பாக பந்து வீச்சில் வனோஜன், ஜெனாதர்சன் தலா 3 விக்கெட்டினையும் முரளிதரன் 2 விக்கெட்டினையும் மதுசன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். 287 ஓட்டத்தினைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 46 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 107 ஓட்டத்தினை எடுத்து 179 ஓட்டத்திணைல் தோல்வியை தழுவிக் கொண்டனர்.சென் ஜோன்ஸ் கல்லூரி B அணிசார்பாக ஜெனாதர்சன் 22 ஓட்டத்தினையும் வனோஜன் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டத்தினையும் யசோகுலன் 14 ஓட்டத்தினையும் நிறோஜன் 14 ஓட்டத்தினையும் சரண்ராஜ் 11 ஓட்டத்தினை யும் அதிக பட்சமாக பெற்றுக் கொண்டனர்.பந்து வீச்சில் மத்திய கல்லூரி அணிசார்பாக ஜஸ்ரின் கனிஸ்ரன், ஒனேசியஸ், சௌமீதரன் தலா 2 விக்கெட்டினையும்ஜெயதிரன், மதூசன், நிருபன், சஞ்சயன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

# உதைபந்தாட்டம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் உழவர் ஒன்றிய விளையாட்டு கழகத்தினால் முன்னாள் உதைபந்தாட்ட வீரர் அமரர் பத்மேஸ்வரன் ஞாபகார்த்த விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் கிளிநொச்சி மாவட்ட அணிகள் அனைத்தையும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் பதிவினை மேற்கொள்ளுமாறு உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். மேலதிக விபரங்களை 0776621826, 0779265259, 0777349693, 0777359670 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(3-254)

# உடுவில் மகளிர் கல்லூரி சாதனை மாகாண மட்டத்தில் பத்து பதக்கம்



மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி (4X100) அஞ்சல் போட்டியில் சாதனையை நிலைநாட்டி தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டது. பழைய சாதனையான 57.4 செக்கன் என்ற நேரத்தை உடுவில் மகளிரும் 57.4 செக்கனில் ஓடி முடித்து சாதனைப் பட்டியலில் பதிவு செய்தது. இச்சாதனையை சி.கஸ்தூரி, மைதிலி, சி.கிருத்திக்கா, அ.மேசி ஆகியோர் நிகழ்த்தினர். 17 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் சிவராணியும் 19 வயதுப் பிரிவில் கமலினி மில்ஸ்சும் தங்கம் வென்றனர். (4X400 மீற்றர்) அஞ்சல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று 2012 ஆம் ஆண்டு 6 தங்கம், 4 வெள்ளியுடன் பத்துப் பதக்கங்களை உடுவில் மகளிர் கல்லூரி வென்றுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்....

# மகாஜனாக் கல்லூரி வெற்றி; ரகுபதியின் சதம் வீணானது




யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணி 58 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.யாழ். மாவட்ட 17 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி கடந்த புதன்கிழமை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்து.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதற்கமைய துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 39 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 275 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் சிந்துஜன் 46 ஓட்டத்தினையும் கஜந்தன் 36 ஓட்டத்தினையும் சாரங்கன் 30 ஓட்டத்தினையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.பந்து வீச்சில் தனுசன், கஜானன் தலா 3 விக்கெட்டுகளையும், ரகுபதி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

276 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 39 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்று 58 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ரகுபதி ஆட்டமிழக்காமல் 102 ஓட்டத்தினையும் பிரவீன் 22 ஓட்டத்தினையும் பிரதாப் 19 ஓட்டத்தினையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் மயூரன் 6 விக்கெட்டுகளையும் கஜந்தன் 2 விக்கெட்டுகளையும் கபிலன், நவராஜா தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

# குட்டி சுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து நடாத்தும் குட்டிசுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு நிலைய முன்றலில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய தலைவர் ம.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்விக் காருண்யரும் கஜமுகன் ஹாட்வெயார் உரிமையாளருமான E.S.P. நாகரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் சண்.வாமதேவன், லயன் த.இ.பாலசுந்தரம், இலங்கை வங்கி நெடுந்தீவு கிளை முகாமையாளர் கு.லவக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஆண்களுக்கான மரதன் ஓட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டியில் விரும்பிய யாவரும் பங்கு பற்ற முடியும். அனைவருக்கும் பெறுமதியான பரிசு வழங்கப்படும்.





யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு விழா அண்மையில் யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கம் உரையாற்றுவதையும் முன்பள்ளிச் சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முன்பள்ளிப் பணிப்பாளர் ஜெயா தம்பையா மாணவனொருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தொடக்கவிழா அரை மணி நேரம் குறைப்பு

போக்குவரத்து நெரிசல் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளை கருத்தில் கொண்டு ஒலிம்பிக் போட்டி தொடக்கவிழா நிகழ்ச்சியில் அரை மணி நேரத்தை குறைக்க முடிபு செய்துள்ளனர். லண்டன் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழா எதிர்வரும் 27ஆம் திகதி கோலாகலமாக நடக்கவுள்ளது. இந்த விழாவுக்கான நிகழ்ச்சிகளை பிரபல திரைப்பட இயக்குநர் டேனி




பாயல் (ஸ்லம்டாக் மில்லியனர் புகழ்) வடிவமைத்து வருகிறார்.

இரவு 9 மணிக்கு தொடங்கி நள்ளிரவையும் தாண்டி 12.30 வரை நீடிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வந்தனர். இந்த நிலையில் ஒலிம்பிக் கிராமம் திறக்கப்பட்டு பல்வேறு நாட்டு வீரர், வீராங்கனைகளும் குவியத் தொடங்கியுள்ள நிலையில் ...டன் நகரம் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கிறது. வீரர்கள் சென்ற பேருந்து ஒன்று வழிதவறிச் சென்று 4 மணிநேரம் அலைய நேரிட்டதால் பாதுகாப்பு பிரச்சினையும் எழுந்தது.

தொடக்கவிழா நடக்கும்போது ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் 80,000 ரசிகர்கள், 16,000 வீரர், வீராங்கனை, நிர்வாகிகள், 10,000 கலைஞர்கள், 70 செம்மறி ஆடு, 12 குதிரை, 10 கோழி, 3 பசு, 2 வெள்ளாடு, நாய்கள் மற்றும் வாத்துக்கள் இருக்கும் என கணக்கிட்டுள்ளனர். நள்ளிரவுக்கு மேல் நிகழ்ச்சி நீண்டால் இவ்வளவு பேருக் கும் பாதுகாப்பு அளிப்பது சிரமம், நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போது மீண்டும் போக்கு வரத்து நெரிசல் ஏற்படும் என்று ஒலிம்பிக் பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுள்ள G4S நிறுவனம் எச்சரித்ததை அடுத்து அரை மணி நேர மோட்டார் பைக் சாகச நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் தொடக்கவிழா சரியாக நள்ளிரவு முடிபுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பைக் சாகச குழுவினருக்கு ஒப்பந்தப்படி முழு தொகையும் அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

# ஒப்பந்த இழுபறி திருப்தியுடன் தீர்ந்தது

## மஹேல

இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையில் இடம்பெற்றுவந்த ஒப்பந்த இழுபறி திருப்தியான முறையில் தீர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு கிரிக்கெட்சபை வழங்க வேண்டிய வருடாந்த ஒப்பந்தம் தொடர்பாக இரு தரப்பினருக்கு மிடையே சமரசம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த விடயத்தை திருப்தியான முறையில் நிறைவு செய்யக் கூடியதாக அமைந்ததாக தெரிவித்த மஹேல, கிரிக்கெட் வீரர்களுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்குமிடையே சிறியவிடயங்களில் மாத்திரமே கருத்து வேற்றுமை காணப்பட்டதாக தெரிவித்த அவர், அவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது ஒப்பந்தம் தொடர்பாக சமரஸம் ஏற்பட்டுள்ள நிலையில் சிறந்த மனநிலையுடன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சூழ்நிலை இலங்கை அணிக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு தேசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் எஸ்.எல்.பி.எல். ஒப்பந்தத்திலும் இலங்கை வீரர்கள் கைச்சாத்திடுவர் என அவர் தெரிவித்தார்.

இலங்கை வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் 4 மாதங்களாக தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்பட்ட நிலையில் இலங்கையின் இருபது-20 தொடரான சிறிலங்கா பிறிமியர் லீக் தொடரின் அறிமுக விழாவில் கலந்துகொண்ட மஹேல ஜெயவர்த்தன, தேசிய ஒப்பந்தம் தொடர்பான முடிபு பெறப்படாமல் இலங்கை வீரர்கள் எஸ்.எல்.பி.எல். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமாட்டார்கள் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்க்கது.



## 13 கட்சிகள்...

மனுக்களைத் தாக்கல் செய்தன.

அத்தோடு 21 சுயேட்சைக் குழுக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றன.

இவற்றில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பாரம்பரிய கைத்தொழிகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இணைப்பாளர் செல்வி க.தங்கேஸ்வரியின் சுயேட்சைக் குழுவும் அடங்குகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சோசலிச மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), இலங்கைத் தொழில்கட்சி, எக்சத் லங்கா மகா சபா கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, எக்சத் லங்கா பொதுசனபக்ஷய ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன. (எ-11)

## புலிக் கொடி...

அந்த சம்பவத்தை அடுத்து விசாரணை நடத்தப்படும் என்று அரசாங்க அப்போது அறிவித்திருந்த போதிலும், இதுவரையில் சந்தேகநபர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று, நேற்று முன்தினம் நடைபெற்ற புலிக்கொடி ஏந்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளிலும் அரசாங்கம் பாராமுகம் காண்பிக்குமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சற்றும் தாமதிக்காத அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, விசாரணை நடத்தப்படும் என்று ஒரே வார்த்தையில் பதிலளித்து விட்டு வேறு விடயம் தொடர்பில் கலந்துரையாட ஆரம்பித்தார்.

இதேவேளை, புலிக்கொடி விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறு தமிழத் தேசிய மக்கள் முன்னணி நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## யாழ்.மருத்துவ...

நடப்பது வேறு என எச்சரித்தும் உள்ளார்.

விடுதலைப்புலி உறுப்பினரோடு தொடர்பு கொண்ட ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் அதைக் கொண்டு வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாகவும் அந் நபர் தெரிவித்துள்ளார்.

இத் தொலைபேசி மிரட்டல் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இத் தொலைபேசி இலக்கம் பதிவு செய்யப்பட்டதோடு மிரட்டல் நபரின் பெயராக சந்தனை எனவும் பதியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு பொலிஸாரின் முறைப்பாட்டில் குறித்த மிரட்டல் சம்பவத்தின் பின்னணியாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரை வைத்தியர் நிமலன் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## தேர்தலில் குற்ற...

இலக்கானவர்கள் அனைவரும் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் கருத்தை நாம் மறுக்கிறோம் என்றும் அமைச்சர் கூறினார்.

இருப்பினும் அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்குஇலக்கானவர்களுக்குவேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான தற்காலிக தடையினை விதிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த உத்தரவினை அடுத்து கிழக்கில் மறை முகமாக இயங்கும் ஆயுதக் குழுக்கள் பீதியில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## பரு.நீதிமன்ற...

ளப்பட்ட இத்தாக்குதலில்நீதவான் வீட்டு யன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

சம்பவம் இடம்பெற்ற சமயம் நீதவான் வீட்டினுள் இருந்துள்ளார். காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் வீட்டின் முன்பகுதியில் இருந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று முன்தினம் நெல்லியடியில் நடத்திய கவனயீர்ப்பு போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதிமன்றம் அனுமதி வழங்கியதன் எதிரொலியாகவே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இத்தாக்குதல் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-3,24)

# வடக்கு சட்டத்தரணிகள் நேற்று...

மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டு நீதவான் மிக மோசமான முறையில் அவதூறு செய்யப்பட்டமைக்காகவும் அமைச் சர் ரிசாட் பதியூதினால் நீதவான் அச்சுறுத்தப்பட்டமையையும் கண்டித்து யாழ்.சட்டத்தரணிகள் காலவரையற்ற பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் யாழ்.நீதிவான் நீதிமன்ற நிர்வாக உத்தியோகத்தர்களினை தவிர யாழ்.மேல் நீதிமன்றம், குடியியல் மேல் முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்ற நிர்வாக உத்தியோகத்தர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மீனவர்கள் தொடர்பாக மன்னார் நீதவான் வழக்கொன்றுக்கு தீர்ப்பளித்ததினையடுத்து உப்புக்குள கிராம மக்கள் நேற்று முன்தினம் மன்னாரில் பெரும் எடுப்பிலான ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர் இவ் ஆர்ப்பாட்டம் மன்னார் பஸார் பகுதி, நகரப்பகுதி என பல இடங்களிலும் நடைபெற்றதோடு மன்னார் நீதிமன்றிற்கு முன்னும் நடைபெற்றது.

இதன்போது ஆர்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே சண்டை மூண்டதனால் ஆர்ப்பாட்டக்காறர்கள் பொலிஸாருக்கு கல்வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் சம்ப இடத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு கண்ணீர் புகைக்குண்டும் தடியடியும் நடத்தப் பட்டமையால் இரு ஆர்ப்பாட்டக்காரர்களும் மூன்று பொலிஸாரும் காயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதன் பின்னர் மன்னார் நீதிமன்றினை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிமன்றிற்கு கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த் தாக்குதலினை கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்டமும் பணி புறக்கணிப்பும் வடக்கில் உள்ள நீதிமன்றங்களில் நடைபெற்றது.

இப் பணிப்புறக்கணிப்பும் ஆர்ப்பாட்டமும் யாழில் நேற்று சட்டத்தரணிகளாலும் நீதிமன்ற உத்தியோகத்தர்களாலும் முன்னெடுக்கப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தில் யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறித்த சம்பவமானது நீதித்துறையின் சுதந்திரத்தையும் கௌரவத்தினையும் மிக மோசமாக அச்சுறுத்துவதாக கருதி இச் சம்பவத்தை சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

இச்சம்பவத்தில் அமைச்சர் பதியுதின் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் யாழ். சட்ட தரணிகள் சங்கம் வலியுறுத்துகின்றது.

மேலும் இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு மேன்மை தங்கிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சமூகம் கூறுகின்றது.

இவ் விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை யாழ். சட்டத்தரணிகள் சமூகம் காலவரையறையற்ற நீதிமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானிக்கின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்.நீதிமன்ற கட்டிடத் தொகுதியிலுள்ள அனைத்து நீதிமன்ற பணியாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு யாழ்.நீதவான் நீதிமன்ற பணியாளர்கள் கலந்து கொள்ளாதது தொடர்பில் நீதவான் நீதிமன்ற பதிவாளரிடம் கேட்ட போது, குறித்த ஆர்ப்பாட்டமானது திடீரென ஒழுங்குபடுத்தப்பட்டதனால் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்வதற்கு அனுமதிபெறுவதற்கு உரிய கால அவகாசம் போதாதமையால் ஆணைக்குழுவிடம் அனுமதிபெற முடியாததனால் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ள முடியவில்லையென பதிவாளர் துளசிகரன் தெரிவித்தார்.

### பருத்தித்துறையில்

இதேவேளை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற ஊழியர்களினால் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு பருத்தித்துறை நகரப்பகுதியிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றம் வரை கண்டன ஆர்ப்பாட்ட பேரணியொன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள் சுலோக அட்டைகளை காண்பித்தும் கோசங்களை எழுப்பியவாறும்தமது எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

சுலோக அட்டைகளில், தலையிடாதே தலையிடாதே நீதித்துறையில் தலையிடாதே, இன்று மன்னார் நாளை எங்கே?, ரிசாட்டே சட்டத்தை கையில் எடுக்காதே, நீதிமன்றத்தை தாக்காதே அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே நீதிபதிகளை அச்சுறுத்தாதே போன்ற வாசகங்களை காண்பித்து தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற ஊழியர்களினால் நேற்று 9.30 மணி தொடக்கம் 11 மணி வரை கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு முன் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டதைக் கண்டித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி நீதிமன்ற பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரால் கண்டன ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டவர்கள் சுலோக அட்டைகளை காண்பித்தும் கோசங்களை எழுப்பியவாறும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (எ-3,4,11,24,266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கந்தர்மடத்தில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட நவீன வசதிகளு டன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. இ

**தொடர்பு: 071-8474664**


## இந்.தூதர்-கூட்டமைப்பு சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவருக் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இன்று இரவு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது. 3 நாள் விஜயமாக யாழ். வர வுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளுக் கும் விஜயம் செய்ய வுள்ளார். (எ-11)

## கடற்புலிகளின் தந்திரோபாய...

17 அமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்ட - யுஎஸ்எஸ் கூல் என்ற அமெரிக்க கடற்படை கப்பல் மீதான தாக்குதலுக்குப் பின்னர் பிபிசிக்குப் பேட்டியளித்த கடற்புலிகளின் தளபதி சூசை, அல்குவைடா தமது தாக்குதல் தந்திரங்களைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறியிருந்தார் என்றும் இலங்கை படை அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

தம்மீது மீனவர் களின் படகு தற்கொ லைத் தாக்குதல் நடத்த வருகிறதோ என்ற அச்சத்தினால், அமெ ரிக்க கடற்படையினர் தாக்குதல் நடத்தி யிருக்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரி வித்துள்ளார். (எ-11)


aat SRI LANKA இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட **கணக்காளராக** நீங்கள் வருவதற்கு நாங்கள் **உத்தரவாதம்**

O/L தகமையுடன் தொழில்த்துறைக் கணக்காளராய் (ACCOUNTANT) வருவதற்கான துரித வழி

- குறுகிய காலத்தில் தொழில்த்துறைக்கு ஏற்ற கல்வி
- குறைந்த பயிற்சிக்கட்டணம்
- சிறந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- Job Training

பதிவுகளுக்கான இறுதித் திகதி 31.07.2012

APTECH Computer Education
Mind Vishion College
(Reg No: PV 85546)
Navalar Road, Jaffna

0212219456



## வருகை விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2012ம் ஆண்டு 2ம் பருவ காலத்திற்கு (Semester) பின்வரும் துறைகளுக்கான **Visiting Lecturer** விண்ணப் பம் கோரப்பட்டுள்ளது.

- கணக்கியல்
- தகவல் தொழில் நுட்பம்
- பொறியியல் மற்றும்
- முகாமைத்துவம்
- ஆங்கிலம்
- French Language

மேற்படி பாடநெறிகளை விரிவுரையாற்றக் கூடிய துறைசார் தகைமை மற்றும் அனுபவம் உடைய விண்ணப்பதாரிகள் தங்களது **சுய விபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு 25.07.2012ற்கு முன்பாக** அனுப்பி வைக்கவும்.

**பணிப்பாளர்,**
**உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம்,**
**665/2, கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C-569)


## இலங்...

தெரிவிக்கும் பட்சத்திலேயே அது குறித்து இலங்கை கவலைப்படவோ அல்லது எதிரான நடவடிக்கைகளையோ முன்னெடுக்க வேண்டிய தேவையோ ஏற்பட்டிருக்கும்.

இந்தியாவின் ஒரு பிராந்தியமாக விளங்கும் தமிழ் நாட்டில் அரசியல் தேவைக்காகவே இலங்கைக்கு எதிரான நடவடிக் கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

இருப்பினும் அதற்கு இந்திய அரசு ஆதரவு வழங் குவதில்லை.

அதற்கு சிறந்த உதாரணங்களாக புலிகளுக்கு எதிரான தடையை இந்திய அரசு நீடித்துள்ள மை மற்றும் தனி ஈழம் கோரும் மா நாடு தொடர்பில் இந் திய அரசு கருணா நிதியைக் கண்டித் துள்ளமை போன்ற வற்றைக் குறிப்பிட முடியும்.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்க மான முறையில் செயல்பட்டு வரு கின்றது.

இந்த உறவுக்கு களங்கம் ஏற்படு த்தும் முயற்சிகளி லேயே சில குழுவி னர் செயற்பட்டு வரு கின்றனர் என்று அமைச்சர் மேலும் கூறினார். (எ-11)


## மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 19,500/-**

தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462 (065)



## விடுதலைப் பெருவிழா

வாருங்கள்... விடுதலை பெறுங்கள்

பாவத்திலிருந்து !
சாபத்திலிருந்து !! தீராத நோயிலிருந்து !!!
பில்லி-சூனியக்கட்டிலிருந்து !!!
பிசாசின் பிடியிலிருந்து !!!
பாவ அடிமைத்தனத்திலிருந்து !!!

**இயேசு விடுதலை கொடுக்கிறார்...**

**இடம் : நகரசபை மைதானம், சாவகச்சேரி.**
**(பஸ்நிலையம் பின்பாக)**
**காலம் : ஜூலை 20,21,22ம் திகதிகளில்**
**நேரம் : மாலை 4.30 மணி**

கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலை பெற்றாவகள்.


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சின்னத்தம்பி - சீதேவிப்பிள்ளை**

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் திருமதி வி. கேதீஸ்வரன் அவர்களின் அன்பு மாமியார் அமரர் சின்னத்தம்பி - சீதேவிப்பிள்ளை அவர்கள் 20.06.2012 அன்று காலமாகிவிட்டார். அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின் றோம். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

(067)


## ANDRA வின் ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ்குடா நாட்டில் முதன் முறையாக
உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த
விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி
அல்கா அஜித்துடன்
மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

றிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
த போன் சொப் - நெல்லியடி 021 2263770

Aircom Travels & Tours தொ.பே : 021 2219113
WESTERN UNION Money Master

நாளை மாலை 6.00 மணிக்கு
வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில்
இம்மாதம் **22**ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண அழைப்பிதழ்கள்




ANDRA WEDDING CARDS
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP

Event Manegement : CEYLON ART CREATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.